Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

English Academy
Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தன்கேணி.
உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்
Better Place For Your Children
(சி.569)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 18 (21.02.2003) வெள்ளிக்கிழமை இதழ் :142

# புரிந்துணர்வு உடன்படிக்கையினால் மக்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகவில்லை!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**"புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் துப்பாக்கிச் சத்தங்கள், நெருக்கடிகள், உயிரிழப்புகள் குறைந்திருக்கின்றனவே தவிர, மக்களின் உணர்வுகள், எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை. மக்களின் இயல்புநிலை திரும்பும் போதுதான் ஏற்கனவே கண்ட உடன்பாட்டின் வெற்றியைப் பகிரக்கூடியதாக இருக்கும். எனவே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான ஒரு வருட பூர்த்தியை மகிழ்வாகக் கொண்டாடுவதற்குரிய நிலையில் மக்கள் இல்லை" என விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

நேற்று கிளிநொச்சி வந்த - ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் முன்னணி உறுப்பினரான இப்ராகிம் இஸ்மாயில் இப்ராகிம் மற்றும் தென்னாபிரிக்காவின் தேசியக் கட்சியின் அனுசரணையாளரான 'ரூல்ப் மேகர் ஆகியோருடனான சந்திப்பைத் தொடர்ந்து தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதன் ஒரு வருட பூர்த்தியை அரசு தென்னிலங்கையில் பெரிய வெற்றியாகக் கொண்டாடுவது குறித்துக் கேட்டபோது, தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவிக்கையில்,

'எம்மைப் பொறுத்தவரையில் இதைக் கொண்டாடும்நிலை பெரிதாக இல்லை. மக்கள் ஏமாற்றத்துடன்

(10 ஆம் பக்கம் பார்க்க)



'ஈழநாதம்' தினசரியின் பதின்மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு சிறப்பித்த தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு, பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பொ. ஜெயராஜ் சிறப்பு நினைவுப் பரிசொன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# நம்பிக்கையைக் கட்டி வளர்க்க அரசு முயற்சி எடுக்கவேண்டும்!

## புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து யாழ். ஆயர்

(யாழ்ப்பாணம்)

"கடந்த ஒரு வருடமாக சமாதானத்தை எட்டுவதற்காக அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர். இதனால் இவ்விரு தரப்பினரும் பாராட்டுக்குரியவர்கள்" இவ்வாறு யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வருடம் நிறைவடைவதையொட்டி கருத்து வெளியிடும்போதே யாழ்.ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மிக நெருக்கடியான சந்தர்ப்பங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாபிரிக்கப் பிரமுகர்கள் கிளிநொச்சிக்கு வருகை

(கிளிநொச்சி)

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இரு அரசியல் பிரமுகர்களான- ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் முன்னணி உறுப்பினரான இப்ராகிம் இஸ்மாயில் இப்ராகிம் மற்றும் தென்னாபிரிக்காவின் தேசியக் கட்சியின் அனுசரணையாளரான ரூல்ப் மேகர் ஆகியோர் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கிளிநொச்சி அரசியற்துறை நடுவப் பணியகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. இதன்போது அரசி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



சமாதானம் சனத்திட்ட வராமல் எப்பிடியாம் சந்தோஷப்படுறது தப்பா....?

# ஜே.வி.பி. பாதயாத்திரை பொலிஸாரால் கலைப்பு

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு பேலியகொடயில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பாதயாத்திரையில் ஈடுபட்ட ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மீது பொலிஸார் நேற்று தண்ணீர்த் தாக்குதல் (Water Canon) மேற்கொண்டு கலைத்தனர்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஒரு வருடப் (10 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாபிரிக்காவில் பேசுக; அந்நாட்டரசு கோரிக்கை!

(கொழும்பு)

ஜப்பானில் நடைபெறவிருக்கும் பேச்சுக்களைத் தொடர்ந்து அடுத்த கட்டச் சமாதானப் பேச்சுக்களை தென்னாபிரிக்காவில் நடாத்துமாறு அரசு மற்றும் விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் உறுப்பினர்களான இப்ராகிம் இஸ்மாயில் மற்றும் தேசியக் கட்சியின் ரூல்ப் மேகர் ஆகியோர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்

(10 ஆம் பக்கம் பார்க்க)




தமிழீழக் காவல்துறைத் தலைவர் தேசியக்கொடி ஏற்றி நிகழ்வை ஆரம்பிக்கிறார்.

# தமிழீழ தேசிய விளையாட்டு விழா கிளிநொச்சியில் கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விளையாட்டுத் துறையினர் நடாத்தும் தமிழீழ தேசிய விளையாட்டுப் பெருவிழா, கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில், தமிழீழ விளையாட்டுத் துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

இதன்போது, சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவினரும் சோதியா மகளிர் படையினரும் அணிவகுப்பில் ஈடுபட, வடக்கு - கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு மாவட்ட அணிகளும் அணிவகுத்துச் சென்றன.

பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், திருமதி பொன். தியாகம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் ஏற்றிவைத்தார்.

விசேடமாக அலங்கரிக்கப்பட்ட கொட்டகையொன்றில் வைக்கப்பட்டிருந்த - கேணல் சங்கர், லெப். கேணல் விக்ரர், மேஜர் அல்பேட், மேஜர் சோதியா ஆகிய மாவீரர்களின் திருவுருப்படங்களுக்கு முறையே, கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், வட போர்முனை நிர்வாகப் பொறுப்பாளர் ஜெரி, லெப்.கேணல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01 505632, 074-612656, 01-390128.
(சி-518)

# புரிந்துணர்வு முழுமையாகவில்லை நோர்வேக்கு ஆட்சேபனைக் கடிதம்!

## மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் அனுப்புகிறது

புரிந்துணர்வு ஒப்பந்தம் யாழ்ப்பாணத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமையைக் கண்டித்து நோர்வேத் தூதரகத்திற்கு ஆட்சேபனைக் கடிதம் அனுப்ப மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

உயர்பாதுகாப்பு வலயத்தினால் மக்கள் மீள்குடியேற முடியாமலிருப்பது குறித்தும், குடாநாட்டில் விதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை உடனடியாக அகற்றவேண்டிய அவசியம் குறித்தும் இதில் சுட்டிக்காட்டப்படவுள்ளது.

யாழ்.நகரின் மத்தியில் உள்ள சுபாஸ் விடுதிப் படைமுகாமை அகற்றுவதன் அவசியம் குறித்தும் இக்கடிதத்தில் குறிப்பிடப்படவுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், விடுதலைப் புலிகளின் தலைவர், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, ஐ.நா பொதுச் செயலர் ஆகியோருக்கும் அனுப்பப்படவுள்ளன.

# தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் திறந்துவைப்பு!

(கிளிநொச்சி)

சமுதாய முன்னேற்ற நிலையத்தினால் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியன நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, முறைசாராக் கல்விப் பணிப்பாளர் (கிளிநொச்சி) சின்னத்துரை ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை புலிகளின் களமுனைத் தளபதிகளில் ஒருவரான ஜெரி ஏற்றி வைத்தார். கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து, தகவல் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தைத் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் திறந்து வைக்க, பெண்கள் தொழிற்பயிற்சி மண்டபத்தைக் கிளிநொச்சி மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சசி திறந்து வைத்தார்.

சமுதாய முன்னேற்ற நிலையத்தின் இயக்குநர் வே.பூங்குன்றன் தலைமையில் இந்நிகழ்வுகள் யாவு[ம்] நடைபெற்றன.

(க,லி,ச,ரா)

# அதிர்ஷ்ட வாரம் 21.02.2003 ~ 27.02.2003



### மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

உடலில் சிறு சிறு உபாதைகளைக் கொடுக்கும். இருப்பினும் தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் செய்யுமிடத்தில் பிரச்சினைகளைக் கொடுக்கலாம். அவதானமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் மன நிம்மதியும் சந்தோஷமும் கிடைக்கும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். பெண்களுக்கு நன்மையும் தீமையும் கலந்த வாரமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.



### இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்**

எடுத்த காரியத்தில் இலகுவான வெற்றியும் தொழிலில் நல்ல முன்னேற்றமும் கொடுக்கும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். இருமல் சளி தொல்லை கொடுக்கும். வெளியூர் பிரயாணங்களால் நன்மை கிடைக்கும். பண வரவு, பொருள் வரவுக்கு இடமுண்டு. வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் விளையாட்டுக்களில் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.



### மிதுனம்

**மிருகசீரிடம், 2,3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம், 1,2,3 ஆம் பாதங்கள்**

மனதில் பதற்றமும் பயமும் காணப்படும். விபத்துக்கள் காயங்களைக் கொடுக்கலாம். அவதானம் தேவை. இடையிடையே தேக சுகம் பாதிக்கப்படும். எடுத்த காரியத்தில் தாமதமும் தடங்கல்களும் கொடுக்கும். ஆனால் வெற்றி கிடைக்கும். பிரயாணத்தால் கஷ்டம் உண்டு. வாகனம், பூமி போன்றவற்றால் லாபம் கிடைக்கும். வியாபாரிகளுக்கு அவதானமாக இருக்கவேண்டிய காலம். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பு உண்டு.



### கர்க்கடகம்

**புனர்பூசம், 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

தேக ஆரோக்கியம் பாதிக்கப்படும். மனதில் அமைதி இராது. வீண் பழி கேட்க நேரிடலாம். ஏமாற்றப்படவும் கூடும். அவதானமாக இருந்தால் தவிர்த்துக்கொள்ளலாம். பிரயாணத்தால் கஷ்டமுண்டு. பிரயாசைக்குரிய பலன் கிடைக்காது. வியாபாரிகள் அதிக முதலீட்டைத் தவிர்ப்பது நல்லது. அரச பயம் உண்டு. பெண்களுக்கு அதிக அலைச்சலையும் நிம்மதிக் குறைவையும் கொடுக்கும். மாணவர்களின் கல்வியில் பின்னடைவைக் கொடுக்கும்.



### சிங்கம்

**மகம், பூசம், உத்தரம், 1ஆம் பாதம்**

பொருளாதாரத்தில் கடும் வரட்சி காணப்படும். பணம் இராது. தொழில் சிறப்பு உண்டு. பெரியோர் மதிப்பும் ஆதரவும் உண்டு. எந்தக் காரியத்திலும் வெற்றி கிடைக்கும். பேரும் புகழும் கிடைக்கும். மனம் சந்தோஷமாக இருக்கும். நீண்டகாலமாக எதிர்பார்த்த பொருள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் குறைவாக இருக்கும். பெண்களுக்குக் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவர், பிள்ளைகளின் அன்பும் ஆதரவும் உண்டு.



### கன்னி

**உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை, 1,2ஆம் பாதம்**

பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும். வெளியூரிலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு. பிரயாணத்தால் நன்மை கிடைக்கும். வாகன சுகமுண்டு. உறவினர், நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு அதிக லாபத்தைப் பெற்றுக்கொடுக்கும். அதிக முதலீட்டினைச் செய்யலாம். பெண்களுக்குக் குடும்பசுகம் உண்டு. வீட்டில் சுபகாரியங்கள் நிகழும் எல்லோருடைய ஆதரவும் கிடைக்கும். மாணவர்கள் அதிக ஆர்வத்துடன் கல்வியில் முன்னேற்றமடைவர்.



### துலாம்

**சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம், 1,2,3ஆம் பாதம்**

பிரயாணத்தால் அதிக கஷ்டத்தைக் கொடுக்கும். வாகனம், பூமி இவற்றால் அதிக செலவைக் கொடுக்கும். இடையிடையே தேக சுகம் பாதிக்கப்படும். வைத்தியச் செலவுகள் அதிகமாக இருக்கும். தொழில் செய்யுமிடத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும். ஏமாற்றப்படுவீர்கள். அவதானமாக இருக்கவும். வியாபாரிகள் அதிக கவனம் தேவை. பொருள் கொள்வனவில் மிகவும் அவதானமாக இருக்கவும். பெண்களுக்கு நன்மையும் தீமையும் கலந்த வாரமாக இருக்கும். மாணவர்கள் உற்சாகமின்றிக் காணப்படுவார்கள்.



### விருச்சிகம்

**விசாகம், 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

பகைவர், விரோதிகளால் அதிக கஷ்டமுண்டு பொருட்சேதம், பொருள் இழப்புக்களைக் கொடுக்கும். பிரயாணத்தால் நன்மையுண்டு. அயலவர் உதவி கிடைக்கும். தொழிலில் ஸ்திரத் தன்மையையும் நல்ல முன்னேற்றத்தையும் கொடுக்கும். திருமண முயற்சிகள் கைகூடும். வியாபாரிகளின் முதலீட்டிற்கேற்ப இலாபம் கிடைக்கும். சமபலன் உண்டு. பெண்கள் அதிகம் நன்மை அடைவர்.

பிள்ளைகளால் பெருமையும் கணவரின் ஆதரவும் கிடைக்கும். மாணவர்கள் நல்ல முன்னேற்றமடைவர்.



### தனு

**மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்**

தேகசுகம் உண்டு. சந்தோஷமான வாழ்க்கை அமையும். குடும்பத்தில் சுபகாரியம் நிகழும். இனசனக் கொண்டாட்டத்தால் வீடு கலகலப்பாக இருக்கும். தொழில் சிறுசிறு தடங்கலைக் கொடுத்தாலும் முன்னேற்றம் உண்டு. வியாபாரிகள் அதிக முதலீடுகளைச் செய்வதன் மூலம் அதிக லாபம் ஈட்டுவர். பெண்களுக்குப் பொருட்சேர்க்கை உண்டு. மகிழ்ச்சியாக இருப்பர். களஸ்திர சுகம் உண்டு. மாணவர்கள் கல்வியில் அதிக முன்னேற்றம் காண்பர்.



### மகரம்

**உத்தராடம், 2,3,4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதம்**

தொழிலில் ஸ்திரத்தன்மை காணப்படும். நல்ல முன்னேற்றத்திற்கு இடமுண்டு. பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். பொருள் வரவிற்கு இடமுண்டு. மனதில் ஒருவித பயமும் கவலையும் இருக்கும். உறவினர்களால் தொல்லைகள் உண்டு. வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. பெண்களுக்கு குடும்பச் சிறப்பு உண்டு. மாணவர்கள் அதிக ஆர்வத்துடன் கல்வியில் முன்னேறுவர்.



### கும்பம்

**அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்**

மனதில் ஒருவித கவலை இருந்து கொண்டே இருக்கும். தொழில் ஸ்தானத்தில் முழுக்கவனமும் செலுத்த முடியாது தவிப்பீர்கள். தேக சுகம் பாதிக்கப்படும். தூக்கக் குறையிருக்கும். இருப்பினும் பொருளாதார நிலை சீராக இருக்கும். வேலையாட்களின் ஒத்துழைப்புக் கிடைக்காது. வியாபாரிகள் அதிக நன்மையை எதிர்பார்க்கமுடியாது. போட்டி அதிகமாக இருக்கும். பெண்களுக்கு மூட்டுவலி, கைகால் நோ காணப்படும். மாணவர்கள் கல்வியில் பின்னடைவைக் கொடுக்கும்.



### மீனம்

**பூரட்டாதி, 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி**

அதிக பிரயாசை உண்டு. பிரயாசைக்குரிய பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்ப மகிழ்ச்சி உண்டு. புதிய ஸ்தானம் கிடைக்கும். நினைத்த காரியம் கைகூடும். வாகன யோகம் உண்டு. தொழிலில் அமோக வெற்றி கிடைக்கும். வியாபாரிகள் அதிக லாபமடைவர். பெண்களுக்கு எல்லோருடைய ஆதரவும் உதவியும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

# பாடசாலைகளில் அச்சமின்றி கல்வி பயிலப் பிரார்த்திப்போம்!

## கல்விசார் அமைப்புக்களின் பேரிணையம் அறிக்கை

புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டு ஓராண்டு நிறைவு பூர்த்தியாகும் இன்றைய நாள் பாடசாலைகளில் சமாதான தினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக, யாழ்.மாவட்டக் கல்விசார் அமைப்புக்களின் பேரிணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டு ஓராண்டு நிறைவுபெறும் இந்நாளில் புரிந்துணர்வு உடன்பாடு குறிப்பிடும் பல விடயங்கள் இன்னமும் நடைமுறைக்கு வராததுடன், படைத்தரப்பால் புதிய புதிய நெருக்கடிகளும் ஏற்படுத்தப்பட்டு, சமாதானம் பற்றிய ஒருவித ஐயத்தை ஏற்படுத்துகின்றது.

நாகர்கோவிலில் பாடசாலையில் யுத்த விமானங்கள் வீசிய குண்டினால் சிதைக்கப்பட்ட எம் சகோதரப் பிஞ்சுகளுக்காகப் பிரார்த்திப்போம். இனிமேலும் இவ்வாறான துயரம் நடைபெறாதிருக்கப் பிரார்த்திப்[பதோ]டு,

எமது பாடசாலைகளில் எமது கல்வியைத் தொடர உயர் பாதுகாப்பு வலய முட்கம்பிவேலிகள் தடையாக இருக்கின்றன. இத்தடைகள் நீங்கி எமது பாடசாலைகளில் அச்சமின்றிக் கல்வி பயிலவும் எமது வீடுகளில் நாமே குடியிருக்கவும் ஏற்ற சூழல் ஏற்படப் பிரார்த்திப்போம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புகையிலையில் இலைச்சுருட்டி நோய்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு, கரந்தன் பகுதிகளில் நடுகை செய்யப்பட்டுள்ள புகையிலைப் பயிர்களில், இலைச்சுருட்டி நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## பரிசில் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளை நடாத்திய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம், இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## சமாதான நீதிவானாக நியமனம்

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த சின்னத்துரை கமலேஸ்வரன் அண்மையில் நீதியமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

(17)

## உலக சாரணர் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச்சங்கம் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆதரவில் நடாத்தும் உலக சாரணர் நாள், நாளை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ச.கைலாசநா[த]ன் தலைமையில் நடைபெறவு[ள்]ளது.

இதில் முதன்மை விருந்தினராக சங்கானை உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசாவும் கௌரவ விருந்தினராக மாவட்டச் சாரண ஆணையாளர் ந.சௌந்தரராஜனும் கலந்து கொள்ளவுள்ளனர்.


## சிறு விளம்பரம்

**பல் கட்டுதல்**

பல் கட்டுதல், பல் கிளிப் போடுதல் நல்ல முறையில் நியாய விலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர், பல் மூக்குக் கண்ணாடி அகம், இல. 05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-585)

**ராஜா** யாழ்ப்பாணம்.

6 ஆவது வாரமாக



விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

**வசீகரா**

10.30, 2.30, 6.30

21 முதல் 24 வரை

**SPIDER MAN**

இரவு 9.30 இற்கு மட்டும் (சி-545)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

பிரசாந்த், சிம்ரன் நடித்த

**ஜோடி**

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி

**M.I. 2**

(சி-544)

**ரூபா மனைப்பொருளியல் நிலையம்**

புதிய வகுப்புகள் நேற்றுக்காலை (20.02.2003) 9.30 மணிக்கு ஆரம்பமாகிவிட்டன.

- கேக் ஐசிங்
- தையல்
- தலையலங்காரம்
- சமையற்கலை
- துணிகளுக்கு வர்ணம் தீட்டுதல்

குறிப்பு: பழைய மாணவிகள் - பரீட்சை, சான்றிதழ் வழங்கல் தொடர்பான கலந்துரையாடலுக்கு 23.02.2003 ஞாயிறு காலை 10 மணிக்குச் சமுகமளிக்கவும்.

தொடர்பு: ரூபா சத்தியமூர்த்தி, 41, இராஜ வீதி (சட்டநாதர் சிவன் கோவிலடி), நல்லூர், யாழ்ப்பாணம். (சி-605)

# நாட்டிலுள்ள 95 சதவீதமான மக்கள் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு ஆதரவு

இலங்கையிலுள்ள 95 சதவீத மான மக்கள், அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு ஆத ரவு வழங்குவதாகத் தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து சிலர் சந்தேகம் தெரிவிக் கின்றனர். அவ்வாறு சந்தேகம்கொள் வது அர்த்தமற்றது. நாட்டில் தொடர்சியாக இடம்பெற்றுவந்த உயிர்ப் பலியை இந்தப் புரிந்துணர்வு உடன் படிக்கைதான் தடுத்து நிறுத்தியது.

இதனால் அனைவரும் இதனை வரவேற்றுக்கொள்வது அவசியமா குமென கிங்ஸ்லி றொட்றிக்கோ மேலும் தெரிவித்தார். புரிந்துணர்வு உடன்பாடு ஒரு வருடம் பூர்த்தியா வது குறித்துத் தேசிய சமாதானப் பேரவை நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

# விகாரை அழிப்பு என்று நாடாளுமன்றை தவறாக வழி நடத்துவதற்கு முயற்சி!

## துரைரெட்ணசிங்கம் எம்.பி. கண்டனம்

(கொழும்பு)

திருகோணமலைப் பகுதியில் புலிகள் விகாரைகளை அழித்துச் சிங்கள மக்களைத் துரத்தியடிப் பதாக திருமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் குணவர்த்தன தெரிவித்த கருத்தை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர் துரைரெட்ணசிங்கம் மறுத் துள்ளார்.

நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரி வித்ததாவது, சிங்கள மக்களை துரத்தியடித்ததாகவும், விகாரைகள் அழிக்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் குணவர்த்தன இம்மன் றத்தை தவறாக வழி நடத்த முனை கிறார்.

நான் மூதூரில்தான் வாழ்ந்து வருகிறேன். அங்கு இத்தகைய சம் பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. தமிழர்களின் கலாசாரம் அனைத்து மதங்களையும் மதிக்கின்றது.

ஆனால், கன்னியாயில் புதிதாக பௌத்த ஆலயம் ஒன்றை அமைக்க எடுத்த முயற்சிகளுக்கு பௌத்த பிக்குகளில் ஒரு பகுதியினர் எதிர்ப் புத் தெரிவித்திருந்தனர் என்றும் நாடாளுமன்றத்தில் துரைரெட்ணசி ங்கம் தெரிவித்தார்.

# கிழக்கு காணிப்பிரச்சினை ஆராயும் குழு; சிங்களவருக்கு பிரதிநிதித்துவம் இல்லை!

## என சிங்கள அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய, விடுதலைப் புலிகள் மற்றும் முஸ் லிம்களைக் கொண்டு அமைக்கப் பட்ட குழுவில் கிழக்குப் பகுதிச் சிங்களவர்களுக்கு இடமளிக்கப்பட வில்லை என்று குற்றச்சாட்டுக்கள் கிளப்பப்பட்டுள்ளன.

தனது பணிகளை ஆரம்பித்துள்ள இக்குழுவின் முதற்கட்ட அறிக்கை ரோக்கியோவில் அடுத்த மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பேச்சுக்களில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்த நிலையிலேயே கிழக்குப் பகுதி சிங்களவர்கள் தமக்கு இக் குழுவில் பிரதிநிதித்துவம் வழங்கப் படவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள் ளனர்.

கிழக்குச் சிங்கள மக்களின் பாதுகாப்பு அமைப்புத் தலைவர் எல்.ஏ. குணவன்ச இது குறித்துக் கூறுகையில்,

இந்தக் குழுவில் கிழக்குப் பகு திச் சிங்கள மக்கள் புறக்கணிக்கப் பட்டிருப்பதாகவும், இது சிங்கள மக் களின் உரிமைகளைக் கேள்விக் குள்ளாக்கியிருப்பதாகவும் குறிப்பிட் டார்.

இதேவேளை, அமைச்சர் ரவூப் ஹக்கீம் கையே ஓங்கியிருப்பதால் அவரது ஆதரவாளர்களே இந்தக் குழுவில் இடம்பெறுவார்கள் என்றும், இதனால் தமக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் அதா வுல்லா அணியினரும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுதக் கொள்வனவில் புலிகள்; நடக்காது என்பது முட்டாள்தனம்!

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கூறுகிறார்

(கொழும்பு)

புலிகள் ஆயுதங்களைக் கொள் வனவு செய்யமாட்டார்கள் என நினைப்பது முட்டாள்தனமானது. இரு பது வருடங்களாகப் புலிகள் ஆயு தங்களைக் கடத்தி வருகின்றார்கள் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர் மானம் மீதான விவாதத்தில் உரை யாற்றிய அவர் மேலும் தெரிவித்த தாவது.

புலிகளிடம் பொலிஸ், நீதிமன் றம் என்பன உள்ளன. அவர்கள் வரி அறவிடுகிறார்கள். பயிற்சி முகாம்களை நடத்துகிறார்கள். இதை யெல்லாம் நாம் அறியவில்லை என்றால் நாம் பெரிய முட்டாள்க ளாகவே இருப்போம்.

புலிகள் 1990 இல் இருந்தே இவற்றையெல்லாம் செய்கிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடை யில் மட்டும் என்று சொல்லிவிட முடியாது. இதை இருதரப்பும் சர்வ தேசத்துக்குக் கொடுத்த வாக்குறுதி என்றும் சொல்லலாம்.

வட-கிழக்கிலுள்ள எவராவது தமக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கருதக் காரணமில்லை. தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையில்தான் அமைதிப் பேச்சுக் கள் நடக்கின்றன.

சகல படைநிலைகளும் உஷார் படுத்தப்பட்டேயிருக்கின்றன. அத் துடன் படை வலுவை அதிகரிக்க வும் சகல முயற்சிகளும் எடுக்கப் பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# சந்திரிகா வரும் கூட்டத்திற்கு என்னை அழைக்க வேண்டாம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அழைக்கின்ற கூட்டங்களில் இனிமேல் தன்னால் கலந்துகொள்ள முடியாது எனத் தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி சந்திரிகா வழமையாகவே நிகழ்ச்சிகளுக்கு குறித்த நேரத் திற்குச் செல்வதில்லை என்று குற்றச்சாட்டுக்களுக்குளாகியுள்ளார். இதனாலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருக் கிறார்.

ஜனாதிபதியை அழைக்கின்ற கூட்டங்களுக்கு தன்னை அழைக்க வேண்டாம் என்றும், தன்னால் வாசலில் மணிக்கணக்கில் காத்துக் கொண்டிருக்க முடியாது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச் சர்கள், அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் தெற் காசியப் பிராந்திய கற்கை நெறிகளுக்கான மன்றம் நடாத்திய விழாவிற்கு ஜனாதிபதி சந்திரிகா ஒன்றரை மணி நேரம் தாமதமாக வந்தார். இதனால் பல வெளிநாட்டு இராஜதந்திரிகளும் காத்துக்கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(நவிண்டில்)

கரணவாய் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று இன்று பி.ப. 2 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.நற்குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (116)

# இலங்கை அணியை எதிர்க்கும் எந்த அணியையும் ஆதரியுங்கள்

## தென்னாபிரிக்க பத்திரிகை அழைப்பு

(கொழும்பு)

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணிக்கு எதிராக எந்த அணி விளையாடி னாலும் அதற்கு தென்னாபிரிக்க ரசிகர்கள் ஆதரவு வழங்கவேண் டும் என்று கேப்ரவுணில் இருந்து வெளியாகும் 'கேப் ரைம்ஸ்' பத் திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மார்ச் 3 ஆம் திகதி இலங் கைக்கும் தென்னாபிரிக்காவுக்கு மான போட்டி நடைபெறவுள்ளது. இதில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றால்தான் சூப்பர் சிக்ஸ் அணியில் இடம்பெற முடியும் என் பது குறிப்பிடத்தக்கது.

இதனாலேயே இலங்கை அணியை உளவியல் ரீதியாக பல வீனப்படுத்துவதற்காக இத்தகைய அழைப்பு விடப்பட்டிருப்பதாகக் கரு தப்படுகின்றது.

### சமாதானம் நிலைத்தால் சம்பள உயர்வு

(கொழும்பு)

அரசாங்க ஊழியருக்கான சம் பள உயர்வுகள் வழங்கப்பட வேண்டு மாயின் தற்பொழுது நாட்டில் நில வும் சமாதான சூழ்நிலை தொடர வேண்டும். அத்துடன் வளைகுடா பகுதியில் ஈராக்கு எதிரான யுத்த மும் ஆரம்பிக்கப்படாமல் இருக்க வேண்டும் என பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்றுமுன் தினம் நாடாளுமன்றத்தில் தெரி வித்தார். (01)

# தமிழீழ தேசிய விளையாட்டு விழாவிலிருந்து....






அணிவகுப்பில் சார்ள்ஸ் அன்ரனி, சோதியா படையணிகள்.




தேசியக் கொடியேற்றும் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்.



ஒலிம்பிக் தீபம் ஏற்றும் தளபதி கேணல் துர்க்கா.



மேஜர் அல்பேர்ட்டின் திருவுருவப் படத்துக்கு ஈகச்சுடரேற்றும் தளபதி லெப். கேணல் நகுலன்



கேணல் சங்கரின் திருவுருவப் படத்துக்கு ஈகச்சுடரேற்றும் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : ரா.டெனிற்றா
முகவரி: ஜெயபுரம் தெற்கு, ஜெயபுரம்.



பெயர் : P. மதுரா, மேதா
முகவரி: தோப்பு, அச்சுவேலி.

நாலாவது அகவையில்



பெயர் : ந.லக்ஷிகா
முகவரி: உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

## சிறுப்பிட்டியில் அறுவடை விழா

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் சிறுப்பிட்டியில் அறுவடை விழா கொண்டாடப்பட்டது.

கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற இவ்விழாவில் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், ஹற்றன் நஷனல் வங்கி அதிகாரிகள், கமநல அமைப்புக்கள், விவசாயிகள கலந்து கொண்டனர். இதன்போது விவசாயிகளுக்கு வங்கி மூலம் கடன் வசதிகள் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும், அதை எவ்வாறு விவசாயிகள் பெறுவது என்பது தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (ரா)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் நடாத்தும் வாராந்த நிகழ்ச்சித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு "பகவத்கீதை" எனும் விடயம் தொடர்பாக யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## மீண்டும் இயங்கும் கூட்டுறவுச் சங்கக் கிளைகள்

(யாழ்ப்பாணம்)

யுத்த அனர்த்தங்களின் பின்னர் இயங்காமல் இருந்த சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் இரண்டு, மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன.

சாவகச்சேரி வடக்கு மருதடியில், 16 ஆம் இலக்கக் கிளையும், சங்கத்தானை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் 21 ஆம் இலக்கக் கிளையும் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் சி.தேவகுமாரால் திறந்து வைக்கப்பட்டன.

## 36 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் 36 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை காலை 10.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 26 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

### நீரிழிவு நோயாளருக்கு ஏற்படும் பங்கசு நோய் *தொடர்ச்சி....*

ஒருவகைப் பங்கசு, நகங்களின் ஓரங்களில் கறுப்பாக வளர ஆரம்பிக்கும். பங்கசு வளர்ச்சி (சந்திர கிரணத்தின்போது படிப்படியாக கருநிழல் வளர்ந்து, இறுதியில் சந்திரனை முற்றாக மறைப்பதுபோல) நகங்கள் முழுவதையும் மூடிக் கறுப்பு நிறமாக்கிவிடும். இதற்கு வைத்தியர்கள் சிபார்சு செய்யும் **TRINCTURE DAKTARIN** என்ற நகப்பூச்சு மருந்து பூசிய சில நிமிடங்களில் காய்ந்து, நகத்தின்மீது ஒரு படையாகப் படிந்துவிடும். இந்த மருந்து சாதாரணமாக ஒருநாளைக்கு இரண்டு தடவை பூசப்படும். ஆனால், ஒவ்வொரு தடவையும், ஏற்கனவே பூசிய, காய்ந்த மருந்துப் படையை அகற்றிய பின்னரே மருந்தைப் பூசவேண்டும். (இதை அகற்றுவதற்கு அசிறறோன், சேஜிகல் ஸ்பிரிற் போன்ற மருந்துகளை உபயோகிக்கிறார்கள். சிலர் கத்தியினால் காய்ந்த படையைச் சுரண்டி அகற்றுகிறார்கள்) பலா முன்னர் பூசிய மருந்துப் படையை அகற்றாமலே அடுத்த தடவை மருந்தைப பூசுகிறார்கள்.இவ்வாறு பூசினால் மருந்து நகத்தை அடையாது. பங்கசுக்களும் அழியா.

கன்டிடியாசிஸ் (**CANDIDIASIS**) எனப்படும் இந்தநோய், பின்னர் பெண்களுக்குப் பெரும் தொல்லை கொடுக்கும் கழுவும் வேளைகளில் ஈரலிப்புள்ள யோனியை அடைநது, யோனிக் கன்டிடியாசிஸ் (**VAGINAL CANDIDI-ASIS**) ஆக விருத்தியடையும் யோனியில் அழற்சியையும், வேதனையையும், வெள்ளைபடுதலையும் ஏற்படுத்தும். இதற்கு வைத்தியர்கள் யோனிக்குள் சொருகும் யோனிக் குளிகையை (**VAGINAL TABLET**) அல்லது (நீண்ட மூக்குக்குழாய் இணைபபுக் கொண்டதும் உள்ளே மருந்தைச் செலுத்தும் வசதியுடையதுமான **CYNO DAKTARIN CREAM** கீறீமைச் சிபார்சு செய்வதுண்டு) குளிகைகள் எல்லாம் விழுங்குபவை அல்ல. யோனிக் குளிகைகள், குதக் குளிகைகள் (சொருகிகள்), நாக்கின் கீழ்வைத்து கரையவிடும் குளிகைகள் எனக் குளிகைகள் பலவகையானவை என்பதைப் பலரும் அறிந்திருப்பதில்லை.

இதனால், பலர் யோனிக் குளிகைகளை விழுங்கி விடுகிறார்கள். மருந்து உரிய அளவில் நோயுள்ள இடத்தை அடையாததால், நோய் மாறாது நீடிப்பதால் அவலப்படுகிறார்கள். மருந்து தருபவரிடம் இந்தக் குளிகையை உபயோகிப்பது எப்படி? என வெட்கப்படாமல் கேட்டு அறிந்து பயன் படுத்தவேண்டும்.

சில கம்பனிகள் தாம் தயாரித்த யோனிக் குளிகைகளுடன் குளிகையை உரிய ஆழததிற்குள செலுத்துவதற்காக 'குளிகைசொருகித்தண்டு' ஒன்றும் இலவசமாக வழங்கப்படும். இதில் சிலவேளை பிளாஸ்ரிக் கூர்முனைகள் காணபபடலாம். இந்த முனைகளை நீக்கிய பின்பே இந்தத் தண்டு பயன் படுத்தப்படவேண்டும் என்பது கவனிக்கப்படவேண்டிய முக்கிய அம்சமாகும்.

சில பங்கசுக்கள் தோல் நோய்களை ஏற்படுத்தும். தலைப்பேனை விட சிறிய நண்டுப்பேன் பூச்சி. சிரங்குப் பூச்சி போன்றனவும், பங்கசுகளும் பிறரது உடைகளை அணிவதன்மூலமும் தொறறும் என்பதை அறிந்திருத்தல் அவசியம். பிற இடங்களுக்கு செல்ல நேரும்போது, ஆண்கள் சாரம், துவாய் போன்றவற்றையும், பெண்கள் துவாயையும் தாம் அணியும் உடைகளையும் தம்முடன் எடுத்துச் செல்வது நோய்கள் வருமுன்காக்கும் பெறுமதிமிக்க நடவடிக்கையாகும். பங்கசுக்களால் ஏற்படும் தோல்நோய் உட்பட பல்வேறு நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பயன்படும் மருந்துகள் 'கிறீம்', 'ஒயின்ற்மென்ற்', 'லோஷன்' என ஒரே மருந்து பல்வேறு வகைகளில் விற்கப் படுகின்றன. இவற்றுள் வைத்தியர் சிபார்சு செய்யும் வகையான மருந்தை வைத்தியர் சிபார்சு செய்யும் தடவைகளில் பூசவேண்டும். சாதாரணமாக ஒரு நாளைக்கு இருதடவை பூசவேண்டும் என சிபார்சு செய்வார்கள். சிபார்சு செய்யப்பட்ட மருந்தின் வேறுவகைத் தயாரிப்புகளை பயன்படுத்துவது நன்றன்று.

(தொடரும்)


# உங்களுக்குச் சமாதானம்



பாஸ்ரர். வின்சன்ட் சகாயநாதன் (கனடா)

TH MC

## நற்செய்திப் பெருவிழா



சுவி.மோகன் C.லாசரஸ் (இந்தியா)

# 2003

அனுமதி இலவசம்

**இடம்:- மானிப்பாய் செல்லமுத்து மைதானம்**

**திகதி:- பெப்ரவரி 20,21,22,23**

**நேரம்:- பி.ப.4.00 மணி**



பாஸ்ரர் . ஜோன்ராஜ் (இந்தியா)

காலையில் விசுவாசிகளுக்கான வேதப்படிப்பு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்



**அந்தோனி**

பலவருடங்களாக அசுத்த ஆவியின் பிடியிலிருந்தேன். ஜெப வேளையில் இயேசு விடுதலை தந்தார்.



**பூங்கோதை**

3 வருடங்களாக மார்புக் கட்டியினால் மிகவும் கஷ்டப் பட்டேன். ஜெப வேளையில் இயேசு விடுதலை தந்தார்.



**ஈசா காதிர் முகம்மது**

5 வருடங்களாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, சரீரமெல்லாம் வீங்கியிருந்தது. ஜெப வேளையில் இயேசு விடுதலை தந்தார்.

**SPONSORED BY: TORONTO HARVEST MISSIONARY CHURCH**

96, Benshire Dr.,Scarborough, ON M1H 1M5, Canada.

TEL: (416) 289 - 3662 FAX:(416) 289 - 2775

தொடர்புகளுக்கு:- 021 222 3653, 021 222 2930

வாருங்கள்! ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்!! (சி-606)




# பெண்களின் முன்னேற்றம் பற்றிய தெளிவு ஆண்களிடம் வேண்டும்!

**சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவன இயக்குநர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரனுடனான சந்திப்பிலிருந்து...**

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்


திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்

ஒன்றை ஆரம்பித்து அதன்மூலம் முன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சேவைகளை ஆற்றிவருகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்களாக இருப்பவர்கள் பெண்கள்தான். அவர்களுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. அதேநேரத்தில் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம் குறைவு. அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாட்டிலும் வெற்றி வருகின்றபோது அநேகமாக வேறு நபர்கள்தான் அந்தப் பெயரை எடுத்துக்கொள்ளப் போவார்கள்.

குறிப்பாகச் சொல்வதாக இருந்தால், சமூகத்தில் இயங்குகின்ற பொது அமைப்புக்களுக்குக் கீழேதான் இவர்கள் இயங்குகின்றார்கள். அப்படி இயங்குவதால் ஆசிரியைகளின் பல செயற்பாடுகள் பாதிப்படைவதாகவே இருக்கின்றது. தீர்மானம் எடுத்தல் என்பதெல்லாம் ஆசிரியைகளால் செய்யமுடியாது உள்ளது.

இதனால்தான் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு என்று ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதனை முதன்முதல் உருவாக்கியது INS தான். ஆனால், இன்று பல முன்பள்ளி ஆசிரியர் சங்கங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் அவற்றிடம் போராட்ட வலுவில்லை.

இதனால்தான் எல்லோரும் இதனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற காரணத்தினால் எமது நிறுவனத்திற்குப் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் என்று பெயர் வைத்தோம். ஏனெனில் ஆண்களும் இது பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே. இப்படி நாங்கள் எமது நிறுவனத்தில் ஆண்களையும் இணைத்துச் செயற்பட்டதால், பல பிரச்சினைகள் பற்றி அவர்களுக்கும் உணரவைத்துள்ளோம். இதனால் இன்று தீர்மானம் எடுத்தல் போன்றவைகளில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறைவாகவே இருக்கின்றன.

கிராம மட்ட அமைப்புக்களை எடுத்துக்கொண்டால் பெண்கள்தான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள். இருந்தாலும் தீமானம் எடுத்தல் என்று வரும்போது அந்த அதிகாரம் மற்றவர்களின் கைகளுக்கு மாறிவிடுகின்றது.

இன்று பல கிராமிய மட்ட சன சமூக நிலையங்களில் பெண்களும் நிர்வாகத்தில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். இவற்றோடு சமூகத் தயாராக்கல் என்கின்ற திட்டம் ஒன்றை உருவாக்கி, நடைமுறைப் படுத்திவருகிறோம். இதற்கு நேர்முகப்பரீட்சை வைக்கும்போது கூடுதலாக ஆண்கள்தான் வருவார்கள். பின்னர் 2,3 மாதங்களில் அவர்கள் நின்றுவிடுவார்கள். ஆனால், பெண்பிள்ளைகள் பொறுமையாக நின்று பிடிப்பார்கள்.

ஆண்களைப் பொறுத்தளவில் பாரம்பரியமான எமது கட்டமைப்பிற்கு ஏற்ப, உழைப்பு என்பது அவர்களுக்கே வேண்டப்பட்ட ஒன்றாக இருப்பதால், அவர்களிடம் பொருளாதாரம் என்பது முதன்மைப்படுத்தப்பட்டு இருப்பதால், அவர்கள் குறைந்த சம்பளத்துடன் வேலை செய்ய முன்வரமாட்டார்கள். ஆனால், பெண்களைப் பொறுத்தளவில் அவ்வாறில்லை. அவர்கள் பொறுமையுடன் இருந்து குறைந்த சம்பளத்திலும் வேலை செய்யத் தயாராகவிருக்கிறார்கள்.

சமூகத் தயாராக்கல் என்பதில், நாங்கள் கூடுதலாகப் பெண்களின் வருமானத்தை அதிகரிக்கக்கூடிய செயற்பாடுகளையே செய்து வருகிறோம். அதன் முதற்கட்டமாக மெல்லக் கற்போரை இணைத்து அவர்களுக்கு கற்றல், கற்பித்தல் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து மெல்லக் கற்போரின் அதிகரித்த வீதத்தை குறைத்துக்கொள்ளும் திட்டம் ஒன்றையும் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.


இவை தவிர, மிகவும் பின்தங்கிய கஷ்ரப்பட்ட பிரதேசங்களிலுள்ள, வேலைவாய்ப்பற்றிருக்கின்ற யுவதிகள் எல்லோரையும் இணைத்து தையல் பயிற்சி நிலையம் ஒன்றையும் ஆரம்பித்து இயக்கி வருகிறோம். இவ்வகுப்பில் சாதாரண, நடுத்தர வருமானத்தைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள்தான் ஆர்வத்துடன் இணைந்து கொண்டார்கள்.

இந்தப்பயிற்சி நிலையத்துக்கும் குறிப்பிட்ட கிராமத்திலேயே இருக்கின்ற, தையல் பயிற்சியைப் பூர்த்தி செய்த பிள்ளைகளை வைத்தே வகுப்புக்களை நடாத்தினோம். 3 மாதங்களைக் கொண்ட பயிற்சி வகுப்பின் ஆரம்பத்தில், சுமார் 40 பிள்ளைகள் சேர்ந்து பயிற்சி பெற்று வந்தார்கள்.

இவ்வாறு நாங்கள் ஆரம்பிக்கின்ற பயிற்சி வகுப்புக்கள் வெற்றிகரமாக நடந்துமுடிந்தால், அவர்களைக் கொண்டே கூட்டுமுயற்சி ஒன்றை ஆரம்பிக்கலாம் எனத் திட்டமிட்டுள்ளோம்.

**சந்திப்பு -**
**கலானந்தி, உஷா**

# அன்பின் சிந்திக்கு மனந் திறக்கும் ஒரு மடல்






சிந்தி,

ஒரு திருமணம் நிச்சயிக்கப்படும்போது திருமணம் புரிந்துகொள்ளும் பெண்ணும் ஆணும் மனப்பொருத்தமுடையவர்களா? என்பதையே கவனிக்க வேண்டும். அதைவிடுத்து நாம் வேறு எத்தனையோ பொருத்தங்களைப் பார்க்கின்றோம். அதில் முக்கியமானது சீதனம்.

இந்த மாப்பிள்ளை விலையேற்றம் காரணமாக வெளிநாட்டிலிருக்கும் ஆண்களை மருமக்களாகத் தேர்ந்தெடுக்கும் பெற்றோர் அதிகரித்து வருகின்றனர். இதற்குப் பல காரணங்கள், அவர்கள் வெளிநாட்டில் எப்படியிருந்தாலும் குணத்தையோ உத்தியோகத்தையோ கவனிக்காது அவர்களுக்கு இந்த நாட்டில் மதிப்புக்கொடுக்கப்படுகின்றது.

அடுத்தது நமது நாட்டின் பொருளாதார வீழ்ச்சி அவர்களைப் பணக்காரராகக் கருதவைக்கிறது.

இந்தக் கண்மூடித்தனமான திருமணங்களால் பாதிக்கப்பட்டோர் பற்றிய கதைகள் உண்மைக் கதைகளாக வெளிவருவதில்லை.

முன்பு ஒரு கடிதத்தில் நேசமலரின் மகனின் கண்ணீர்க் கதையை எழுதியிருந்தேன். நேற்று மற்றுமொரு கதையைக் கேட்க நேர்ந்தது.

பெற்றோரைத் திருப்திப்படுத்துவதற்கான இந்த நாட்டில் – ஒரு பெண்ணைத் திருமணம் செய்து, தனது வேலைக்காரிபோல் நடத்துவோர் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். பெற்றோருக்கு ஒரு வேலைக்காரியாக இருப்பதற்காக ஒரு பெண்ணைத் திருமணம் செயபவர்களுமிருக்கிறார்களோ என சந்தேகிக்க வைக்கிறது இக்கதை.

வெளிநாட்டிலுள்ள மகனுக்கு நிச்சயித்த பெண்ணை பெற்றோர் தமது வீட்டிற்கு அழைத்துக்கொள்கிறார்கள். இடைக்கிடையே வரும் தொலைபேசி உரையாடல்களுடன் வெளிநாட்டு வாழ்வு பற்றிய கற்பனைகளுடனும் அந்த வீட்டில் கூலியில்லாத வேலைக்காரியாக அந்தப் பெண் வருடக்கணக்கில் இருக்கிறாள்.

அவர்கள் வீட்டில் மிகப்பக்குவமாக நடக்கவேண்டிய கட்டாயம் அவளுக்கு. சற்றுக் கருத்து முரண்பட்டாலும் அவளுடைய எதிர்கால இன்பவாழ்வு பாழாகிவிடுமோ என்ற பயத்துடன் வாழவேண்டும்.

இப்படி அவள் மிகுந்த கவனத்துடன் வாழ்ந்தும், அவளது குணநலன்பற்றி மாமன் மாமிக்கு திருப்தி ஏற்படாமல் சுமார் இருபத்திரண்டு மாதங்களின் பின் அவள் பிறந்த வீட்டிற்கே திரும்ப நேர்ந்துவிட்டது.

தொலைதூரத்திலிருந்து தொலைபேசியில் மட்டும் பேசி, தாயின் சொல்லைக் கேட்டோ, வேறு காரணத்தாலோ அவளது இதயத்தைத் துகளாக்கியவன், அவள் வேறு திருமணமும் செய்ய முடியாத நிலையை உருவாக்கிவிட்டான்.

நேற்று நான் சந்தித்த சுதந்திரா தன் தோழியின் இந்தக் கதையைக் கூறிவிட்டு தனக்கும் அப்படி ஒரு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாகவும் இரு தினங்களின் பின்னர் மாமியாரின் வீட்டிற்குப் போகவேண்டுமென்றும் கூறினாள்.

உன்கதையும் தோழியின் கதையாகாதா? – என்றேன்.

இல்லை. சற்று வித்தியாச மானதாகப் போகிறது – என்றாள்.

என்ன வித்தியாசம்? என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். எனது வருங்காலக் கணவரை ஒரு வைத்திய பரிசோதனை அறிக்கையைப் பெற்று எனக்கு அனுப்புமாறு நான் கடிதமெழுதி நான்கைந்து நாட்களாகிவிட்டன. எயிட்ஸ் பரிசோதனைக்கு. – என்றாள்.

சுதந்திரா போன்ற பெண்கள் நம்மிடையே அநேகர் தோன்ற வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டேன்.

அன்புடன் யோசி.

# பெண்ணாகிவந்த பூங்காற்று!

*“எங்கு மனம் அச்சமற்றிருக்கிறதோ,*
*எங்கு தலை நிமிர்ந்தே உள்ளதோ,*
*எங்கு அறிவுக்குத் தடை இல்லையோ,*
*எங்கு குறுகிய சுவர்களால் உலகம் துண்டாடப்படவில்லையோ,*
*எங்கு சத்தியத்தின் ஆழத்தில் இருந்து சொற்கள் ஊற்றெடுக்கின்றனவோ...*
*எங்கு சலியாத முயற்சி செம்மையை நோக்கித் தன் கைகளை நீட்டுகிறதோ,*
*எங்கு பகுத்தறிவு என்னும் தெளிந்த நீரோடை உயிரற்ற*
*பராம்பரியம் என்னும் பாலை மணலுள் வழி தவறிப் போகவில்லையோ...*
*அந்த விடுதலைச் சுவர்க்கத்துள் என் இறைவனே நான் விழிப்படைவேனாக....”*

என்பது கவிஞர் தாகூரின் கவிதை.

அந்த விடுதலைச் சுவர்க்கத்துள் நாம் விழிப்படைவதற்காக இக்கட்டுரைத் தொடர் பெண்களைப் பற்றிக் கொஞ்சம் சிந்திக்கிறது.



வானத்தின் சரிபாதி, பெண்கள் மனித சமூகத்தின் அரைப்பங்கு, மற்றைய அரைப்பங்கை விடப் பல்வேறு வழிகளில் தாழ்ந்துபோக நாம் அனுமதிப்போமாயின், அது மனித சமுதாய வளர்ச்சிப் போக்கில் ஐம்பது வீதம் பின்தங்கும் நிலையை உருவாககும். இந்த உண்மையை உணர்ந்து கொண்ட உலக நாடுகள் பலவும் இன்று பெண்களின் ஆளுமை விருத்தி தொடர்பான பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. எமது நாட்டில் இது தொடர்பான பயணம் இன்னும் நெடும் பயணமாகவே இருக்கிறது.

**ஆண் - பெண் வேறுபாடு**

தாயின் வயிற்றில் ஒரு குழந்தை கருத்தரிக்கும் போதே - தாயின் முட்டையும் தந்தையின் விந்தும் பலோப்பியாக்குழாயில் கருக்கட்டும் போதே - உருவாகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பது தீர்மானிக்கப்படுகிறது. பாலியல் நிறமூர்த்தங்கள் சேரும்போது XX என்ற சேர்வை பெண்ணையும், XY என்ற சேர்வை ஆணையும் தோற்றுவிக்கின்றன. ஆகவே ஒரு வகையில் சொல்லப்போனால், குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தந்தையின் விந்தே தீர்மானிக்கிறது. (பெண் குழந்தை பெற்றுக் கொண்டாயே என்று மருமகளை மாமியார் திட்டுவது பொதுவாக நடைபெறும் விடயம்.) பிறப்பில் ஏற்படும் இந்தப் பால் வேறுபாடு இறப்புவரை இருக்கத்தான் போகிறது. அதிலே எந்த மாற்றத்தையும் செய்யமுடியாது. செய்யவேண்டிய அவசியமில்லை. இதனை இன்னொரு வகையில் சொல்வதாயின் ஆண், ஆண்தான். பெண், பெண்தான்.

பால் நிறமூர்த்தங்கள் சேரும் போது சில அசாதாரண நிலைமைகளும் தோன்ற இடமுண்டு. உதாரணமாக XO என்ற கலப்பு உருவாகுமாயின் அந்த நிலையை “ரேணேர்ஸ் சின்ட்ரோம்” (Turner's Syndrome) என்று மருத்துவர்கள் குறிப்பிடுவார்கள். இவ்வாறு உருவாகும் குழந்தை தோற்றத்தில் பெண்ணாக இருந்தாலும், உடலின் உள்ளே சூலகங்கள் காணப்படாதிருக்கலாம். இத்தகைய ஒருவர் தாய்மைப் பேறு அடையமுடியாது போகலாம். XXY என்ற கலப்பு உருவாகுமாயின், அந்த நிலையை “கிளின் ⁛.பெல்ரேர்ஸ் சின்ட்ரோம்” (Klinfelter's Sydrome) என்பர். இவர் தோற்றத்தில் ஆணாக இருப்பினும், இவரது இலிங்க உறுப்புக்கள் சிறிதாக இருக்கும். துணைப் பாலியல் விருத்தியில் மார்பகங்கள் பெருக்கலாம். இத்தகு அசாதாரண நிலைகள் மிக அரிதாகவே தோன்றுவன. மற்றைய வேளைகளில் எல்லாம் ஆண், பெண் வேறுபாடு மிகத் தெளிவானது.

**பால்சார் உணர்வு**

பால் வேறுபாடு சார் நடத்தை என்பது மாற்றக்கூடிய ஒன்று. ஒருவர் ஆணாக, இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அவரது எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் என்பன சமூகத்தாலும் சூழலாலுமே முழுமையாகத் தீர்மானிக்கப்படுகின்றன. எமது சமூகத்தில் ஆண் என்பவன் ஆக்ரோஷ வெளிப்பாடு கொண்டவன், வீரன், தலைமை தாங்குபவன், தனித்து நின்று செயலாற்றக்கூடியவன், உடலாலும் உள்ளத்தாலும் வலிமையானவன், போட்டியிட்டு வெல்லக்கூடியவன், ஆசைகளைக் கொண்டவன் என்று கருதப்படுகிறது. இதற்கு மறுதலையாகப் பெண் என்பவள் பணிந்து போகக்கூடியவள், பிறரில் தங்கியிருப்பவள், உடலாலும் உள்ளத்தாலும் மெலிந்தவள், நலிந்தவள், போட்டியிட்டு

**கோகிலா மகேந்திரன்**

வெல்ல முடியாதவள், ஆசைகளை இலகுவில் தியாகம் செய்யக்கூடியவள் என்றெல்லாம் நம்பப்படுகிறது. மேலே சொல்லப்பட்ட இந்த இயல்புகள் யாவும் பெற்றுக் கொள்ளப்பட்ட இயல்புகளே. பால் சார்ந்து ஒருவரிடம் உண்டாகும் உணர்வுகளை ஆங்கிலத்தில் ‘ஜென்டர்’ (gender) என்பர். இது மாறக்கூடிய ஒன்று. மாற்றக்கூடிய ஒன்று.

**தயாரிப்பு வேலைகள்**

பிள்ளை ஒன்று பிறந்த உடனேயே அது எப்படியான உணர்வுகள், நடத்தைகளைக் கொண்டு வளர வேண்டும் என்று சமூகம் நினைக்கிறதோ அப்படி வளர்ப்பதற்குத் தேவையான தயாரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிடுகின்றன.

(தொடரும்)

# கவிதைச் சோலை



## ஊடல்

அழுகையின் வலி
அது எப்படி இருக்கும். ?!!!

குழந்தைப் பருவத்தில்
தடக்கி விழுந்த போது
யாரும் ஓடி வராததால்
அழுதபடியே எழுந்து
நடக்கப் பழகியவள்.

ஆறுவயதில் மேடையேறி
பேசுவதற்காய்
வசனம் தடைப்பட்டதால்
அழுதழுதே ஒற்றை பார்த்து
வாசித்து முடித்தவள்.

பள்ளிப் பருவமதில்
அத்தனை பாடங்களிலும்
அதிக மதிப்பெண்கள்.
என்றோ ஓர் நாள் ஆசிரியர்
அடித்தபோது

அழுதழுதே பிரம்பு பறித்தவள்.

தலையில் தூக்கி
வைத்தாடும் அப்பா.
மழையில் நனைந்ததற்காய்
அடித்தகையை அழுதபடியே
பிடித்துத் தடுத்தவள்.

கணவன் பேசியதற்காய்
அழுதழுதே அரவணைப்பதற்காய்
வார்த்தை தேடி அலைந்திருக்கிறேன்.

என்னை யாரும் சீண்டியதற்காய்
கோபம் கொண்டு பல முறை
அழுதிருக்கிறேன்.

முதன் முதல்
வார்த்தை கொண்டு
இதயம் அறுத்ததையும்
உணர்ந்தழுதுள்ளேன்.

ஆனாலும் இவை எல்லாம்
வலியை தரவில்லை
இன்றுவரை சிரிப்பைத்தான்.

*திருமதி நளாயினி தாமரைச்செல்வன்*



## பிளவு

*பிளவின் தொடர்ச்சியாய்*
*இதயத்திலும் நிகழ்ந்ததொரு அதிர்வு*

*உணர்ச்சிகள் கோடி மனதின் பிளவுக்குள்*
*நசுங்கிச் சிதைந்து...*
*சேதம் அதிகம் தான் நிச்சயமாய்*

*எப்போதும் உலர்ந்த விழிகளில்*
*விழித்துக் கொண்டதொரு நதி*

*இப்போதும், காற்றின் மீது புகையும்,*
*நிகோடினும் காறி உமிழும் என்னால்...*

*பூமியின் நகர்வையோ காற்றின் சீறலையோ*
*இயற்கையின் மீறலையோ சாட முடியாது தான்*

*நிதியனுப்பியவர்களின் வரிசையில்*
*நானுமொரு மூலையில் நிற்பது தவிர்த்து...*

*காயமான பூமிக்கும் மனிதர்களுக்கும்*
*செய்வதென்னவென*
*பிளந்த இதயத்துடன் மௌனமாய்*
*நிற்கின்றேன்.*

க. ஆர்த்தி

## என் இரவுகளின் நிழற்படம்

என் அப்போதுதான் முடிந்திருந்த கவிதையை
வாசிப்பிற்கிடையில்
பிடுங்கிக் கிழித்தெறிவாய் ~ நான்
விழியுயர்த்திப் புன்னகைப்பேன்.
வெறிகொண்டு
பேனாவை முறிப்பாய் ~ அதற்கு
மறுப்புக் கூறாதிருப்பேன்.
என் அபத்தச் செயல்களின்
கீழ்மை பற்றி
ஆவேசமாய்ச் சிதறுகிற
உன் வார்த்தைகளுக்கு
பதிலற்றுப் போயிருப்பேன்.
என் இயலாமைக் குணத்தின்
திரை விலக்கிக் காட்டி
அயல் வீட்டு ஆண்களோடு
ஒப்பிட்டுக் குமைவாய் ~ நான்
தலையசைத்து ஆமோதிப்பேன்.
குடும்ப நிர்வகிப்பில்
என் மெத்தனத்தைச் சாடி
கனவுப் போர்வையை
உதறச் சொல்வாய்
இருக்கை விட்டெழுந்து உன்
நெற்றிநீர்ப் புள்ளிகள் துடைப்பேன்.
என் அறியாமை கலைக்கும்
பிரசங்கத்தில் களைத்து
இறுதியில் எரிச்சலுடன்
இனியெதுவும் எழுதக்கூடாதென்று
உத்தரவிட்டு உறங்கப் போவாய்.
நாளின் இறுதி முத்தத்திற்காக
உன் சிரம் வருடி
எழுப்ப நினைப்பேன்
உன் அயர்ந்த சுவாசம்
தேவைகளற்றிருக்கும்.
துயிலுகின்ற என் தாலி கட்டிய கவிதையை
நின்று கொண்டே பார்ப்பேன் ~
உள்ளே சில கவிதைகள்
அப்போதுதான் விழித்தெழும்.



- யூமா. வாஸுகி.

# பெற்றோர் - பிள்ளைகள்; முரண்பாடும் மோதலும்!

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பிள்ளைகள் சுதந்திரத்தையே எதிர்பார்ப்பர். ஆறு மணிக்கு வீட்டுக்கு வரவேண்டுமெனப் பெற்றோர் எதிர்பார்ப்பர். ஏன் ஏழு மணிக்கு வந்தால் என்ன? என்று பிள்ளைகள் கூறும். பெற்றோருக்குக் கோபம் வந்துவிடும். இது வரையும் கீழ்ப்படிந்த பிள்ளை, இந்த வயதில் கீழ்ப்படியாது செயற்படும்போது இது பெற்றோருக்குப் பிரச்சினையாக இருக்கும். கீழ்ப்படியும் பிள்ளைக்கு அதிகம் அன்பு காட்ட முனைவர் பெற்றோர். இது பிழை. பிள்ளைகள் பிள்ளைகளாக இருப்பதால் அவர்களுக்கு அன்புகாட்ட வேண்டுமே தவிர, கீழ்ப்படிவதால் அல்ல. அல்லது நன்றாகப் படிப்பர் என்பதாலுமல்ல.

இந்த வயதில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் மோதல் வருவதற்குக் காரணங்கள் உண்டு. சில காரணங்கள் பிள்ளைகளால் ஏற்படும். சில மோதலுக்குப் பெற்றோரே காரணம்.

இந்த வயதிலுள்ள பிள்ளைகள் சுயமாகச் செயற்பட விரும்புவர். தானே தீர்மானம்

## வாழ்வில் வளர்ச்சி நிலைகள்; அறிதலும் புரிந்துகொள்வதும்

எடுக்க விரும்புவர். ஒரு தந்தையிடம் தனது மகள் ஒரு நாள் "அப்பா நான் எனக்கு விருப்பமான நேரம் வீட்டுக்கு வர, போவதற்கு சுதந்திரம் இல்லையே" என்று அப்பாவிடம் கூறியது. அப்பா பிள்ளையைப் பார்த்து, "இந்த வயதில் உங்களுக்கு தேவையான உணவு, உடுப்பு, போக்குவரத்துச் செலவு எல்லாவற்றையும் நீங்களே தேடிக்கொண்டால் சுதந்திரமாக நடக்கலாம்" என்றார். "படித்துக் கொண்டிருக்கும் பிள்ளையாதலால் சுயாதீனமான நிலைக்குப் படிப்படியாகவே வரவேண்டும். நீங்கள் விரும்பிய நேரத்திற்கு வருவதற்கும், போவதற்கும் நாங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டுமென நீங்கள் எதிர்பார்த்தால் எங்களுக்குக் கஷ்டம். நாங்களும் சுயாதீனமானவர்கள். உங்களது தேவைகள் எல்லாவற்றையும் நீங்களே கவனித்தால் அதைச் செய்யமுடியும்" என்றார். அதற்குப் பிள்ளை விரும்பவில்லை. இவ்வாறு பிள்ளையுடன் கலந்துரையாடி, படிப்படியாகவே சுயாதீன நிலைக்கு பிள்ளை வர உதவவேண்டும்.

பிள்ளைகள் சுயாதீனத்தை எதிர்பார்க்கும்போது, பெற்றோருக்கும் தெரிவது பிள்ளை கீழ்ப்படிவில்லை என்றே. வல்லமைக்கு எதிராகச் செயற்படுவர். அல்லது எதிர்த்துச் செயற்படுவர். உறுதியாக இது சரியா, பிழையா என்று தெரியாததால் பெற்றோருடன் மோத எண்ணுவர். எதிலும் உறுதியில்லாத நிலை இருக்கும். தன்மேல் சந்தேகப்படுவர். என்னால் அதைச் செய்யமுடியுமா? சரி வருமா? என்று தன்னைச் சந்தேகிப்பர். அதேபோன்று அடிக்கடி மாறும் தன்மை உண்டு. ஒரு நேரம் ஒன்றைக் கூறுவர். மற்றநேரம் வேறொன்றைக் கூறுவர். ஆகவே மாறுபடும். இந்த மனப் போக்கால் பெரியவர், பெற்றோருடன் மோதல் வருகிறது. இவைகள் பிள்ளைகளின் மனப் போக்கால் ஏற்படுபவை.

அதேபோன்று, பெற்றோரின் மன நிலையாலும் மோதல் ஏற்படலாம். ஆதிக்கத்திற்குப் பழக்கப்பட்டவர்கள் பெற்றோர்கள். நில் என்றால் முன்பு நின்ற பிள்ளை, சொன்னது செய்யப் பழகி இருந்தது. பெற்றோரும் அதைப் பாரமெடுக்கப் பழகி இருந்தனர். "வா" என்றதும், ஏன்?, நான் அங்கே போயிற்று வாறன் - என்று பிள்ளை கூறியதும் பெற்றோரின் மனதில் குறைவுள்ளதாகத் தோன்றும்.

அதேபோன்று, பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாதுகாக்கப் பழக்கப்பட்டுள்ளனர். எல்லா விபத்திலிருந்தும் பாதுகாக்கப் பழகியுள்ளனர். இப்போது பாதுகாப்புத் தேவையில்லை என்று பிள்ளை கூறியதும் அதைப் பெற்றோரால் தாங்கமுடியவில்லை. இப்போது பாதுகாப்பு அவ்வளவு தேவையில்லை. சிறிது வழியை மட்டும் காட்டுவது, ஆலோசனை மட்டும் கூறுவது போதுமானது என்பதைப்



பெற்றோரால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. பிள்ளைகளைப் பிடித்திருந்த நிலையிலிருந்து அவர்களைக் கைவிடப் பெற்றோரால் முடியவில்லை. பெற்றோர் பற்றிப் பிடித்துள்ள ஆதிக்கத்தைப் படிப்படியாகக் கைவிட்டு பிள்ளைகளைச் சுயாதீனமாக்க வேண்டும்.

காரணம் - பெரியோர், பெற்றோராகிய நாம் எமது செயல்கள் எங்களுடையவையே என்று கூறப் பழக்கப்பட்டுள்ளோம். எமது பிள்ளைகளைப் பற்றிய எமக்குள்ள செயல்களைக் கைவிட்டதும், நாம் அர்த்தமற்றவர்களாகி விடுவோம் என்று தவறாக எண்ணுகிறோம்.

"நீங்கள் யார்?" என்று ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த பேச்சாளர் ஒருவர் கேட்டார். அக்கூட்டத்திலிருந்த பெண் எழுந்து "நாம் பாடசாலையில் ஆசிரியை, கடையில் சாமான் வாங்கச் செல்லும்போது நுகர்வோர், பஸ்ஸில் பிரயாணி, வீட்டில் மனைவி, பிள்ளைக்குத் தாய்" என்று கூறினாள். அப்போது பிரசங்கம் செய்தவர் அப்பெண்ணைப் பார்த்து "உங்களது கணவன் இறந்தபின், கடைக்குப் போகமுடியாது, கால்கள் செயலிழந்த நாளில், பாடசாலைக்குச் செல்ல முடியாத நாளில் நீங்கள் யார்?" என்று கேட்டார். இங்கேயே எமது செயல்களைக் கொண்டு எம்மை வெளிப்படுத்துகின்றோம் என்பது புரிகின்றது. செயல்களுடன் மட்டுமே நாம் அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

எமது வாழ்வில் எமது செயல்கள் மாறலாம். தொழிலிருந்து இளைப்பாற நேரிடும். அப்போது நான் யார்? நானே செயல்கள் என்று எண்ணுவது பிழை. நான் என்ற நபர் மிகவும் உயர்ந்தவர். நான் அதிபர், சங்கத்தலைவர் என்பதல்ல. இவை யாவும் இல்லாமல் போகும் காலம் வரும். அப்போது நாம் இருக்கின்றோம். நான் நானேதான் என்ற

**எஸ்.ஜே.யோகராசா**
**உளவளத்துணை ஆலோசகர்**

மனப்பாங்கு எமக்கு இருக்க வேண்டும்.

பெற்றோர் - பிள்ளைகளின் வாழ்வில் எல்லாவற்றையும் சிறுவயதில் நிர்வகித்தனர். இது சிறுவயதில் மட்டுமே. ஆனால், பிள்ளைகள் வளர்ந்ததும் திருமணமாகியதும் - இது இல்லாது போய்விடும். அப்போது பிள்ளை யார் எனச் சிந்திக்கும். அப்பா, அம்மா நிலை என்பது - பிள்ளைகளைத் தங்கியிருக்கச் செய்வதிலில்லை. பிள்ளையின் வளர்ச்சி எவ்வளவு தூரம் உதவுகிறோமோ அதற்கேற்பவே அப்பாவாகிறோம்., அம்மாவாகிறோம். அந்த அறிவு, பயிற்சிக்கேற்பவே - தந்தை, தாய் ஆகிறோம். அப்பா என்பவர் அப்படிப்பட்டவரே. சட்டதிட்டங்களைக் கூட்டுபவர் அல்லர். சில பெற்றோர் காலையிலிருந்து மாலை வரை சட்டதிட்டங்களைப் பிள்ளைகளுக்குப் போடுவர். இவ்வாறு சட்டதிட்டம் போட்டவர்கள் தம்மைத் தேவையில்லை என்று பிள்ளைகள் கூறியதும், அதைப் பெற்றோரால் கேட்கக் கஷ்டமாகவே இருக்கும்.

*(தொடரும்)*

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*தேவர் அனையர் கயவர் அவரும்தாம்*
*மேலன செய்துஒழுக லான்.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## விஷ வித்து!

தமிழர் தாயகப் பகுதிகளில் - அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்களில் - தமிழர்களின் அடையாளத்தைச் சிதைக்கவும், வரலாற்று ரீதியான ஆதாரங்களைத் திரிவுபடுத்தவும், மத ஆக்கிரமிப்பை செய்யவுமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதை இன்றும் காணக்கூடியதாகவிருப்பது- தமிழினத்தை அச்சுறுத்தும் மிக ஆழம் கொண்டதாக உருப்பெற்றுள்ளது.

ஏற்கனவே - தமிழ்ப் பகுதிகளில் தமிழர் பண்பாட்டையும், கலாசாரத்தையும், வரலாற்றுச் சின்னங்களையும் - யுத்தத்தின் பெயரால் படைகளும், சில இடங்களில் சிங்கள மக்களும் - அழித்துச் சிதைத்த வரலாற்றுக் காயங்கள் பலவும் எங்கெங்கும் பரந்திருக்கையில்,

அமைதிக்காலத்திலும் - தமிழ்ப் பகுதிகளில் மத ஆக்கிரமிப்பைக் கட்டவிழ்த்துவிடும் வரைமுறையற்ற செயல், யாழ்.குடாநாட்டின் இதயப் பகுதியான கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்டுவருவதைக் காண முடிகின்றது.

கந்தரோடையின் வரலாற்றுப் பெறுமதியை - திரிபுபடுத்தி, அப்பிரதேசத்தையும், அங்கு காணப்படும் வரலாற்று ஆதாரங்களையும் சிங்கள பௌத்தத்திற்குச் சொந்தமாக்கும் முயற்சியில் படையினரும், பௌத்த பிக்குகள் சிலரும் ஈடுபட்டுவருகின்றனர்.

ஏற்கனவே தென்கிழக்குப் பகுதியிலே - தமிழ் மக்களின் அடையாளத்தை, அவர்களின் வாழ்வியலை, அங்கு வேரூன்றிப் போயிருந்த தமிழரின் பண்பாட்டை - கொஞ்சம் கொஞ்சமென அகற்றியும் அழித்தும் - இன்று அம்பாறையை, சிங்களவர்கள் பெரும்பான்மையினராக வாழும் மாவட்டமாக மாற்றிய கொடுமையும் -

மட்டக்களப்பின் வடபாலிலுள்ள பல தமிழ்க் கிராமங்கள் இன்று சிங்களக் கிராமங்களாகவும் - யாருமற்ற சூனியப் பிரதேசங்களாகவும் பறித்தெடுக்கப்பட்ட துயரமும் -

திருகோணமலையையும், மட்டக்களப்பையும் துண்டாடுவோமெனக் கங்கணங்கட்டி - அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடனும் ஆதரவுடனும் 'சேருவில' ஓர் ஆக்கிரமிப்புச் சின்னமாக மாறிவிட்ட விந்தையும் -

திருமலையில் தமிழ் ஒலித்த பகுதிகளெல்லாம் இன்று - அப்பட்டமாகவே, பகிரங்கமாகவே - சிங்களக் கிராமங்களாக - படையினரின் பாதுகாப்புடன் - அப்பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழ்மக்களின் கண்முன்னாலேயே உருவாக்கப்பட்டிருப்பதும் -

தமிழர் தாயகத்தின் இதயப் பகுதியாகத் திகழும் மணலாறு - இன்று 'வெலிஓயா'வாக சிங்களமயப் படுத்தப்பட்டு, தமிழ்மக்களின் பொன்கொழிக்கும் பூமி - இராணுவக் காவலில் சிங்களப் பகுதியென அடாத் தாக்கப்பட்டுள்ளதும் -

இன்னும் மன்னாரிலும், வவுனியாவிலும் ஏராளம் ஆக்கிரமிப்புக்கள் நிகழ்ந்துள்ள சூழலும் - தமிழ் மக்கள் மீதான போரின் ஒரு வடிவமாக மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில்,

தமிழ்மக்களின் பண்பாட்டுத் தலைநகரமெனக் கருதப்படும் யாழ்ப்பாணத்திலேயே, அடிமடியில் கைவைப்பதாக - சிங்கள பௌத்தத்திற்கு உரிமம் நிலைநாட்ட முனையும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்.குடாநாடு இராணுவத்தின் ஆதிக்கத்திலிருப்பதைத் துணையாகக் கொண்டு - மிகப் பாரிய துரோகமொன்று புதிய விகாரை வடிவில் கந்தரோடையில் அரங்கேறி வருகின்றது.

இதன்மூலம் - கந்தரோடையை பௌத்த தலமாக்கி - சிங்கள பௌத்த பேரினவாதத்தினை அங்கும் விதைபோட்டு விருட்சமாக்க அடிபோடப்பட்டு விட்டது.

தமிழர்தம் தாயகத்தின் பல பகுதிகளையும் சிங்களப் பௌத்த பேரினவாதத்திற்குத் தாரை வார்த்து விட்ட அல்லது பறிபோகவிட்ட வரலாற்றுத் தவறை- யாழ்ப்பாணத்திலும் தொடர்வதற்கு அனுமதிக்கப் போகின்றோமா? எனத் தமிழர்கள் அனைவரும் இக் கட்டத்தில் விழிப்புணர்வு பெறவேண்டும்.

இல்லையேல் - இன்று அமைக்கப்பட்டுவிட்ட தகரக் கொட்டகை, இன்னும் சில தினங்களிலேயே தாதுகோபமாகி - கந்தரோடை எமது கையைவிட்டுப் போகவும், அது பரந்து விரிந்து கொஞ்சம் கொஞ்சமாக - யாழ்ப்பாணத்தையே சிங்கள பௌத்த பிரதேசமாகத் திரிபுபடுத்தவும், அப்பட்டமான ஆக்கிரமிப்புக்கும் ஊக்குவித்துவிடும்.

# நாடாளுமன்ற நடப்புகள்



பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரையில் இருந்து.....

### நிமால் சிறிபால டி சில்வா (பொ.ஐ.மு)

அரசாங்கம் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றது. சில மாதங்களுக்கு முன்னர் வாழைச்சேனையில் முஸ்லிம்களின் 100 கடைகள் எரிக்கப்பட்டன. 13 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமுற்றனர். இது அத்தகைய சம்பவத்தில் ஒன்றே.

நாம் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக தனிப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சுமத்த விரும்பவில்லை. நாடு அபாயத்துக்குள் இருக்கிறது என்பதற்காகவே இப்பிரேரணை கொண்டுவரப்பட்டது.

### மகிந்த ராஜபக்ஷ (எதிர்க்கட்சித் தலைவர்)



நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு அரசின் நடவடிக்கைகள் போதாது. இதனால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமன்றி பாதுகாப்புக் கட்டமைப்புக்குள்ளும் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதை அரசாங்கம் உடனடியாக கவனத்தில் எடுக்கவேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமையைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தவறிவிட்டார்.

### விமல் வீரவன்ச (ஜே.வி.பி)



பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வருவதை அரசாங்கம் தடுப்பதற்குப் பலத்த முயற்சிகளை எடுத்தது.

அரசாங்கம் சமாதானம் என்று சொல்லிக் கொண்டு நாட்டின் பாதுகாப்பைப் பற்றி கவலையற்று இருக்கிறது. ஆனால், புலிகள் தனிநாட்டுக்கான பணிகளைத் தீவிரமாக மேற்கொண்டிருக்கின்றனர்.

### அமைச்சர் கருஜெயசூரிய



பாதுகாப்பு அமைச்சர் ஆயுதக் கொள்வனவு மற்றும் பாதுகாப்பு விடயங்கள் அனைத்திலும் வெளிப்படையாகவே செயற்பட்டு வருகின்றார். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்திருப்பது விந்தையானது.

### தினேஷ் குணவர்த்தனா (பொ.ஐ.மு)

அனைத்து மக்களையும் காப்பதாகத்தான் பாதுகாப்பு அமைச்சர் சத்தியப் பிரமாணம் செய்திருக்கிறாரே தவிர புலிகளைப் பாதுகாப்பதற்காகவில்லை.

புலிகள் விகாரைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். புனிதப் பொருட்களுக்கு வரி அறவிடுகிறார்கள். ஆனால், புலிகள் வானொலிக் கருவிகளை வரி இன்றி இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கியது. ஜேர்மனியில் இருந்து திரும்பிய புலிகள் இங்கு விமானத்தைக் கொண்டு வந்துள்ளனர். இதைச் சோதனையின்றி சுங்க அதிகாரிகள் அனுமதித்துள்ளனர் - என்றார்.

# வட-கிழக்கு மருத்துவ அதிகாரிகளுக்கு விசேட பயிற்சித் திட்டம் மிக விரைவில்!

## உலக சுகாதார நிறுவனம் ஆதரவு வழங்கும்

(யாழ்ப்பாணம்)

வட. - கிழக்கில் உள்ள மருத்துவ, சுகாதார அதிகாரிகளுக்கென உலக சுகாதார நிறுவனம் ஊடாக விசேட பயிற்சித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இப்பயிற்சித் திட்டத்தின் முதற்கட்டமாக உலக சுகாதார நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று ஏற்கனவே திருகோணமலைக்கு வந்து சேர்ந்துள்ளது.

இக்குழுவினர் வட - கிழக்கில் உள்ள மருத்துவ சுகாதார அதிகாரிகளுக்குக் கட்டங்கட்டமாக பயிற்சி வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

முதற்கட்டமாக திருமலையில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கு ஏற்கனவே பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றை விட "நீர்ப்பு" செயற்திட்டத்தில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கும் விசேட பயிற்சித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வட - கிழக்கு மாகாணசபை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## பெண் புலிகளின் மாதிரி இடுப்புப்பட்டி கண்காணிப்புக் குழுவிடம் கையளிப்பு

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களிலுள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண் போராளிகள் அணிந்திருக்கும் மாதிரி இடுப்புப் பட்டி ஒன்றை இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் கையளித்துள்ளனர்.

மட்டு. - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டு. - அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காயா ஆகியோர், இந்த மாதிரி இடுப்புப் பட்டியை கண்காணிப்புக்குப் பிரதிநிதிகளுக்குக் காட்டி விளங்கப்படுத்தினர்.

இந்த விளக்கங்களைக் கேட்ட கண்காணிப்புக் குழு அதிகாரிகள், இது குறித்துத் தாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## கிளாலியில் உயிரிழந்த சிப்பாய்க்கு இராணுவ மரியாதை இல்லை!

கிளாலியில் பெண் புலிகளின் முன்னரங்க நிலைகளுக்குள் ஊடுருவியபோது சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவச் சிப்பாய்க்கு இராணுவ மரியாதைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

இச்சிப்பாயின் இறுதிச் சடங்குகள் மாத்தளையில் நடைபெற்றன. இதன்போது உடலுக்கு இராணுவ மரியாதை வழங்கப்படாததுடன்- இராணுவ உடையும் அணிவிக்கப்படவில்லை.

இராணுவச் சட்டங்களை மீறினால் இவ்வாறு மரியாதை வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சக சிப்பாயைத் தாக்கினார் என்றும், பயிற்சியின்போது காணமற்போனார் என்பதும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களாகும்.

இதேவேளை, இச்சிப்பாயின் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையை யாழ்.மாவட்டப் பிரதி இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் கையளித்தார்.

இந்த அறிக்கையில் சிப்பாய் காணாமற்போனமை - அதற்கான சூழல் என்பன குறித்து விரிவாக விளக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

# அதிகரித்த விலையில் மருந்துகள்; நடவடிக்கை எடுக்க முடிவு!

இலங்கையில் பரவலாக விற்கப்படும் ஐந்து மருந்துகளின் விலை, நிர்ணயிக்கப்பட்டதிலும் பார்க்க அதிகமான விலையில் விற்கப்படுவதாகவும் இதற்கு எதிராக வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமொக்ஸிலின் (**Amoxicilin**) செபாலெக்ஸின் (**cephalexin**) எரித்திரோமைசின் (**Euythromycin**) மெற்போமின் (**metformin**) அற்றானோலோல் (**Atanolol**) ஆகிய மருந்துகளே நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக விற்கப்பட்டு வருகின்றன.

இம் மருந்துகள் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட 35 சதவீதம் முதல் 85 சதவீதம் அதிகமாக விற்கப்பட்டு வருகின்றன. இம் மருந்துகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு ச.தொ.ச. மற்றும் தனியார் மருந்தகங்களால் விற்கப்படுகின்றன.

இந்த மருந்துகளுக்குப் பதிலாக வேறு தயாரிப்புக்கள் இலங்கையில் விற்பனையில் இல்லாமையினால் அதிக விலையில் இவை விற்கப்படுவதாகத் தெரியவருகின்றது. இதையடுத்து அதிகவிலையில் மருந்துகளை விற்கும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்போவதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

## பட்டதாரி ஆசிரியர் நியமனம் பதவியேற்புத் திகதி நீடிப்பு

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பட்டதாரிகளுக்கு கடந்த மாதம் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களுக்கமைய பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்தத் திகதி இம்மாதம் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

## சாதாரணதர பரீட்சையில் தகவல் தொழில்நுட்பம்

அடுத்த ஆண்டு தொடக்கம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாகச சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

இதனைப் போதிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 80 பாடசாலைகளில் இக்கற்கைநெறி ஏற்கனவே கற்பிக்கப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# தென்கிழக்கில் பறிபோகும் நிலம்!

**சசிகரன்**

அம்பாறை மாவட்டம் தங்களுடையது, தங்களுக்கென ஒரு தனி ஆட்சி வேண்டும் என்று முஸ்லிம் மககளும், எங்களுடைய தாயகம் என சிங்கள மக்களும் போட்டி போட்டுக் கொள்கின்றனர். இது நியாயமானதா?

நாங்கள் இம்மாவட்டத்தின் சரித்திரத்தைச் சற்றுப் பின்நோக்கி ஆராய்ந்தால் - தற்பொழுது சிங்களப் பகுதிகள் எனக்குறிப்பிடுகின்ற மகா ஓயா, சேரன்கடை, உகனை, தமனை, இங்கினியாகலை, வைக்கேலை, பாணமை, லகுகல போன்ற இடங்களில் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே தமிழ்மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரங்களாகத் தமிழ்மக்களால் கட்டப்பட்ட கோயில்களும், சிங்கள மக்களுக்கு விற்கப்பட்ட காணிகளின் உறுதிகளும் ஆதாரங்களாக விளங்குகின்றன.

கல்ஓயா திட்டம் உருவாக்கப்பட்ட பின்பே, சிங்கள மக்களின் தொகை அம்பாறை மாவட்டத்தில் பெருகியது. மாத்தறை, கண்டி, காலி போன்ற இடங்களிலிருந்து சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டு கொலனிகளில் குடியேற்றப்பட்டார்கள். அத்துடன் இத்திட்டத்தின் கீழ், அம்பாறையில் கட்டப்பட்ட இரட்டை வீடுகளில், ஒரு வீடு சிங்களவருக்கும், மற்றைய வீடு தமிழ் மக்களுக்குமாக வழங்கப்பட்டது. இக்கொலனிகள், தமிழ் பேசுவோர் என்ற போர்வையில் முஸ்லிம்களுக்கும் மற்றும் சிங்கள மக்களுக்கும் வழங்கப்பட்டன. ஆனால், இன்று அம்பாறையில் ஒரு வீடுகூட தமிழ் மக்களுக்குச் சொந்தமில்லை. அத்துடன், சிங்களப் பிரதேசத்தை அண்டியிருந்த கொலனிகளும் தமிழ் மக்களால் கைவிடப்பட்டன. இதற்குப் பல காரணிகளை நாம் கூறலாம்.

**▲ அடிக்கடி ஏற்பட்ட இனக்கலவரம்**

1. *திட்டமிட்டு தமிழ் மக்கள் துரத்தப்பட்டனர்.*
2. *சிங்களவர்களுடைய தொல்லைகள் பொறுக்க முடியாமல் காணிகளை விற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.*

*உ-ம*:- 16 ஆம் கொலனி போன்றவை.

**▲ திட்டமிட்ட காணிச் சுவீகரிப்பு**

தமிழ் மக்களின் காணிகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு, பின்னர் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டமை.

*உ-ம்*:- கிங்குரான.

அம்பாறையிலுள்ள ராட்டிய கணடம் தீகவாபியில் உள்ள பொன்னவெளி போன்ற காணிகள், இதற்குச் சான்றாக இன்னும் "பொன்னன்வெளி" என்ற தமிழ்ப் பெயரோடு - இக்காணி சுமார் 100 சிங்கள மக்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டிருப்பதைச் சொல்லலாம்.

**▲ உயிருக்குப் பயந்த வரலாறு**

படையினர் தாக்குவாரென்ற அச்சத்தில் தமிழ் மக்கள் சிங்களப் பகுதிக்கோ, அல்லது முஸ்லிம் பகுதிக்கோ செல்லமுடியாத நிலையில், இக்காணிகளைப் பராமரிப்பதைவிட உயிரைக்காக்க வேண்டும் என்று நினைத்தவர்கள் மிகுதியாக இருந்த காணிகளையும் விற்கவேண்டி ஏற்படடது. இதற்கு உதாரணமாக - நீத்தை, ஆலங்குளம் மற்றும் கிங்குரான போன்ற இடத்தில், சீனித்தொழிற்சாலையில் வேலை செய்தவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட அரச காணிகளைக்கூட தமிழர்கள் இழந்துள்ளார்கள்.

**▲ கலப்புத் திருமணம்**

லகுகல, பாணம போன்ற இடங்களில் கலப்புத்திருமணம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால், போராட்டக் காலங்களில் சில மக்கள் இக்கிராமங்களிலிருந்து, இராணுவத்தின் கெடுபிடியிலிருந்து தப்புவதற்காக, இக்கிராமங்களை விட்டு - தம்பிலுவில், அக்கரைப்பற்று, திருக்கோவில் போன்ற இடங்களில் குடியமர்ந்தார்கள். மிகுதியானவர்கள் சிங்களம் பேசுபவர்களாகவே மாறிவிட்டார்கள்.

**▲ தொகுதிப் பிரிப்பு**

மீண்டும் - நாம் முஸ்லிம்கள், தங்களுடைய தாயகம் எனக்கூறிக் கொண்டிருக்கின்ற பகுதிகளைச் சற்று அவதானிப்போம். இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்பு கரவாகுப்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப் பற்று போன்ற பற்றுக்கள் யாவும், தமிழ் வன்னியனார் ஆட்சியின் கீழேதான் இருந்துள்ளன. நாளடைவில் இது எவ்வாறு சுவீகரிக்கப்பட்டது என்பதைச் சற்று ஆராய்வோம்.

ஆரம்பத்தில் முஸ்லிம்கள், நாடாளுமன்றத்திற்கு, அம்பாறை மாவட்டத்திலிருந்து அனுப்பப்பட்டபோது, தமிழ் ஆட்சியின் நிழலில்தான் சென்றார்கள். அவர்கள் அன்று தொடக்கம் தங்களுக்குள்ளேயே சில திட்டங்களை வைதது, தங்களுக்கென ஒரு நிலப்பரப்பைப் பிடித்துக் கொண்டார்கள். இதில் முதலாவது முயற்சிதான் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டமை. (கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவோடு இணைக்கப்பட்டிருந்த துறை நீலாவணைக் கிராமம், மட்டக்களப்பு மாவட்டத்திற்குச் சேர்க்கப்பட்டது.)

பொத்துவில் தொகுதி, கல்முனைத் தொகுதி, சம்மாந்துறைத் தொகுதிகள் பிரிக்கப்பட்டமை - பூகோளரீதியாக சாய்ந்தமருதுக்கு மேற்கேயுள்ள வீரமுனை, நாவிதன்வெளி, சம்மாநதுறை போன்ற கிராமங்கள் கல்முனையுடன் சேர்க்கப்படாமல் சம்மாந்துறையுடன் சேர்க்கப்பட்டமை, காரைதீவு போன்ற கிராமம், அக்கரைப்பற்றுத் தொகுதிக்குச் சேர்க்கப்பட்டமை, (பூகோளரீதியாக இது சம்மாந்துறைக்கோ அல்லது கல்முனைக்கோ சேர்க்கப்படவேண்டிய கிராமமாகும்.)

- இவ்வாறு தொகுதிகள் பிரிக்கப்பட்டு, தமிழ்மக்கள் எல்லாத் தொகுதிகளிலும், இனவிகிதாசாரம் குறைந்தவர்களாக்கப்பட்டார்கள். மேலே குறிப்பிடட கிராமங்கள், கல்முனைக்கோ, சம்மாந்துறைக்கோ சேர்க்கப்பட்டிருந்தால், அம்பாறை மாவட்டத்தில் இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகளைப் நாடாளுமனறத்திற்கு அனுப்பக்கூடிய வாய்ப்பை நாம் பெற்றிருக்கலாம். ஆனால், இன்று ஒருவரைக்கூட நாடாளுமன்றம் அனுப்புவது சிரமமான காரியமாக மாறிவருகிறது.

நாளடைவில், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் அரசியற் கட்சிகளைக் கைவிட்டு பேரினவாதக் கட்சிகளுடன் சந்தர்ப்பத்துக்கேற்ப மாறி, தங்களுடைய திட்டங்களை நிறைவேற்றலாம். இரண்டாவது தடவையாக - கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பகுதியில் பெருமளவு முஸ்லிம்களும், சிறிதளவு தமிழ்மக்களும் வரக்கூடியவாறும், இதேபோல் சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில், நிந்தவூர் போன்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவு பகுதிகளும் பிரிக்கப்பட்டன. முஸ்லிம்கள் பெருமளவு இருப்பதால் நாளடைவில் இக்காரியாலயங்களிலெல்லாம் முஸ்லிம் உதவி அரசாங்க அதிபர்களே கடமை புரிந்தார்கள். முஸ்லிம் உதவி அரசாங்க அதிபர்கள் கடமை புரிந்த காலஙகளில் தமிழ்ப் பகுதிகளில் உள்ள அரசகாணிகள், முஸ்லிம்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. உதாரணமாக வரமுனை, சம்மாந்துறை, திருக்கோயில், சிறுநீத்தை, கோமாரி போன்ற இடங்களாகும்.

ஆனால், காடுகளை வெட்டிக் கஷ்ரப்பட்ட தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் இக்காணிகளை வறுமையின் கொடுமையால், இவர்களுக்கு விற்ற சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால், அங்கு ஏற்பட்ட இராணுவ நெருக்கடிகளால் தங்கள் காணிகளை விற்க வேண்டிய நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள். சட்டப்படி அரச காணிகளை மற்றவர்களுக்கு விற்கவோ, கைமாற்றவோ முடியாது.

இதையும் மீறி அம்பாறை மாவட்டத்தில் உள்ள சில உத்தியோகத்தர்கள் பணத்திற்காக இக்காணிகளின் 'பெமிற்' போன்றவைகளை மாற்றம் செய்து மற்றவர்களுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். மீண்டும் பிரதேச செயலகங்கள் பிரிக்கப்பட்டதும், கல்முனை, காரைதீவு, நாவிதன்வெளி போன்ற பிரதேசசபைகள் முஸ்லிம் பிரதேச செயலாளர்களின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தன. அண்மையில் காரைதீவு, நாவிதன்வெளி பிரதேச செயலகங்கள் பிரிக்கப்பட்டாலும், கல்முனையில் தமிழ் மக்களுக்கெனப் பிரிக்கப்பட்ட கல்முனைத் தமிழ் பிரதேச செயலகம் இன்னும் இவர்களுடைய கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. ஆரம்பத்தில் இந்தக் கல்முனைப் பிரதேச சபை மூன்று பிரதேச சபைகளாகப் பிரிக்கப்பட்டது. அவை சாய்ந்தமருது, கல்முனை முஸ்லிம், கல்முனைத் தமிழ என்பனவாகும்.

ஆனால், இன்று மற்றைய இரண்டு சபைகளும், தனித்தனிப் பிரதேச செயலகங்களாக இயங்குகின்றன. தமிழ்ப் பிரதேசசெயலகம் மட்டும் கல்முனைப் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்குகின்றது. இதேபோன்று ஆரம்பத்தில் பொத்துவில் பிரதேச செயலகத்தின்கீழ் கோமாரி போன்ற தமிழ்க் கிராமங்களுக்கென ஒரு தமிழ்ப் பிரதேச செயலாளர் நியமிக்கப்பட்டார். இது சிறிது காலத்திற்குத் தமிழ் மக்களுக்குக் காட்டப்பட்ட கண்துடைப்பு. தற்பொழுது எந்தத் தமிழ்ப் பிரதேச செயலாளரும் இங்கில்லை.

இதுமட்டும் இவர்களுடைய இலக்காக இருக்கவில்லை. தமிழ் மக்களின் பகுதியில் உள்ள காரியாலயங்களைக்கூட பயங்கரவாதம் என்ற போர்வையில், சிங்களவர்கள் செறிந்த பிரதேசங்களில் அமைக்கப்பட்ட - தங்களுடைய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

▲ பழமை வாய்ந்த ஆதார வைத்தியசாலை கைவிடப்பட்டு, மடுவம் என்ற வைத்தியசாலை அமைககப்பட்டது.

▲ அக்கரைப்பற்று வைத்தியசாலை கைவிடப்பட்டு, எழுதுவட்டுவான் வைத்தியசாலை அமைக்கப்பட்டது.

▲ மின்சார நிலையம், தொலைபேசி நிலையம் போன்றவை ஆலையடிவேம்புப் பிரதேசத்திலிருந்து மாற்றப்பட்டு கருங்கொடித்தீவுப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டமை.

▲ வலயக் கல்வி அலுவலகங்கள் (**Zonal Education Office**) அமைக்கப்பட்டமை.

சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று பிராந்திய அலுவலகம், திருக்கோவில் பகுதியில் அமைக்கப்பட வேண்டியதொன்றாகும். காரணம், இதன்கீழ் அடங்குகின்ற தமிழ்ப் பாடசாலைகள், முஸ்லிம் பாடசாலைகளைவிட அதிகமானவையாகும். ஆனால், ஆரமபத்தில் இக்காரியாலயத்திற்கு தமிழரே நியமிக்கப்படுவர் எனக்கூறி, தமிழ் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார். இதுவுமொரு கண்துடைப்பேயாகும். ஆனால், இன்று அலுவலகம் முற்றிலும் முஸ்லிம்களின் ஆட்சியின்கீழ் இருந்துகொண்டு இருக்கிறது.

- இவ்வாறு வாக்குரிமையையும் கல்வியையும் மாத்திரம் பறிக்கவில்லை. காணிகள் எவ்வாறு பறிக்கப்பட்டன என்பதைப்பற்றியும் ஆராய்வோம். முன்பு கூறியதுபோல இனக்கலவரங்களாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் தமிழ்மக்கள் - தற்பொழுது முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற, நிந்தவூர், சம்மாந்துறை, ஒலுவில், அட்டாளைச்சேனை போன்ற இடங்களில் காணிகளை விறபனை செய்தாலும், திட்டமிட்டு தமிழ மக்களைத் துரத்தவேண்டும் என்ற சில நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

உதாரணமாக, கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கென பெரும்பாலும் தமிழ மக்களுக்கு உரிய காணிகளே சுவீகரிககப்பட்டன. பக்கத்தில் இருந்த முஸ்லிகளின் காணிகள் சுவீகரிக்கப்படவில்லை. இது ஒரு திட்டமிட்ட செயலாகும்.

இதேபோன்று முஸ்லிம்களுக்கு அண்மித்திருந்த தமிழ்மக்களின் காணிகளில், அவர்கள் இல்லாத நேரங்களில் மாட்டு எலும்புகளை கொட்டுவது, மலசலத்தைக் கொட்டுவது போனற தொல்லைகளைக் கொடுத்தும் தமிழ்மககளை விரட்டி அடிக்கப்பட்டனர்.

- இவ்வாறான தொல்லைகளால், சம்மாந்துறை, பாலமுனை, மீனோடைக்கட்டு, நிநதவூர், ஒலுவில், திரைக்கேணி போன்ற இடங்களில், தமிழ்மக்கள் பெருமளவில் காணிகளை இழந்து நிற்கின்றனர். இதுமட்டுமல்லாமல், இவர்களுக்குச் சாதகமாக அரசாங்கததால் கொண்டுவரப்பட்ட குத்தகைச்சட்டம், காணி மறுசீர்திருத்தச் (**Land Reform Commission**) சட்டம் போன்றவை முஸ்லிம்களுக்கு மிகவும் பலனளித்தன.

பொத்துவில், அக்கரைப்பற்று, சமமாந்துறை, பாலமுனை, ஒலுவில் போன்ற பகுதிகளில்- மட்டக்களப்பு, ஆரைப்பற்றை, கல்லாறு, நாவற்குடா போன்ற ஊர்களைச் சேர்ந்தவர்களுக்கு பெருமளவு தென்னந்தோட்டங்களும், வயல் காணிகளும் இருந்தன. பெருமளவு வயல்கள் இக்கிராமங்களில் முஸ்லிம்களாலேயே பயிர் செய்யப்பட்டன.

குத்தகைச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது தமிழ்மக்களின் சில காணிகள், குத்தகைக்குச் செய்தவர்களுக்கு உரிமையாக்கப்பட்டன. சில காணிகளை அவர்கள் விற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன்பின் கொண்டுவரப்பட்ட காணி மறுசீரதிருத்தச சட்டம் முஸ்லிம்களுக்கு மிகவும் நன்மை அளித்தது. அதாவது 50 ஏக்கர் தோட்டம் அல்லது 25 ஏக்கர் வயல் காணி, இவைபோக மிகுதிக்காணிகள் சுவீகரிக்கப்படடன. இவை தமிழர் அல்லாதோருக்கே வழங்கப்பட்டன. ஆனால், முஸ்லிம் பகுதிகளிலுள்ள காணிகள், முற்றாக முஸ்லிம்களுக்கே வழங்கப்பட்டன.

இவ்வாறு இக்காணிகளில் குளறுபடி செய்வதற்கு, கச்சேரியிலுள்ள தமழ் உத்தியோகத்தர்கள் பணத்திற்காக தங்கள் கடமையில் இருந்து தவறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சியில் சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு பிடிப்பதற்கு மின்சாரசபையிடம் வாகனம் இல்லை!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் சட்டவிரோத மின் பாவனையாளரைப் பிடிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வாகன வசதியில்லை என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடமராட்சிப் பிரதேசத்தில் இருபத்தினான்கு மணிநேர மின்சார விநியோகம் ஆரம்பித்ததை அடுத்து, இந்தப் பகுதிகளில் சட்டவிரோதமாக மினசாரம் பெறுவோர் தொகை அதிகரித்துள்ளது.

சட்டவிரோத மின் பாவனையாளர்கள் தொடர்பாகப் பொதுமக்கள் மின்சாரசபையிடம் முறையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான சட்டவிரோத மின் பாவனையை இரவுவேளைகளில் சென்று கண்டுபிடிப்பதற்கு வாகன வசதி இல்லாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரசபையில் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் கனரக வாகனங்களே இரவுவேளைகளில் சட்டவிரோத மின் பாவனையாளர்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்த வேண்டியிருப்பதாகவும் அவ்வாறு செலலும்போது வாகனத்தின் சத்தம் கேட்டவுடன் சம்பந்தப்பட்டவர்கள் விழிபபடைவதால் அவர்களைப்பிடிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், தொடர்ந்து சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதாக மின்சாரசபை வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (ச)

## போதைப்பொருள் வைத்திருந்தவர் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்!

### புத்தளத்தைச் சேர்ந்தவராம்

(புத்தளம்)

சட்டவிரோதமாக கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த நபர் ஒருவரை நேற்றுமுன்தினம் பொலிஸார் கைதுசெய்து யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

யாழ்.சோனக தெருவில் தங்கியிருக்கும் இப்ராகிம். அஸ்தாப் என்பவர் சட்டவிரோதமாக 2.5 கிராம் கஞ்சா வைத்திருந்ததற்காகப் பத்தாயிரம் ரூபா தண்டப் பணமும், இரண்டாயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு யாழ். நீதிவான் விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

புத்தளத்தைச் சேர்ந்த மேற்படி நபர் தாம் சுற்றுலாவிற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்ததாகத் தெரிவித்தார். (லி)

## நூல் வெளியீட்டு விழா

'கட்டுரைத் தேனருவி' நூல் வெளியீட்டு விழா, கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையில் கடந்த 16 ஆம திகதி பாடசாலை அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் நடைபெற்றது. கலாநிதி எஸ்.சிவலிங்கராசா நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

## ஊரெழுவில் புதிய முகாம் அமைக்கும் பணியில் படையினர்!

(யாழ்ப்பாணம்)

ஊரெழுவில் புதிய படை முகாமொன்றை அமைக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் புதிய முகாமொன்றை அமைப்பதற்காகப் படையினர் வீடொன்றைத் தெரிவு செய்துள்ளனர். அத்துடன், இந்த வீட்டின் சுற்றுப்புறத்தைத் துப்புரவு செய்யும் பணியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

புதிதாகப் படைமுகாம் அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டிருப்பது இப்பகுதி மக்களைக் குழப்பத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

## பேச்சில் பிரச்சினை இருப்பினும் திருப்திகரமாகவே இருக்கிறது

### அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)


புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் பிரச்சினைகள் இருக்கின்றன.

ஆனால், அந்தப் பிரச்சினைகளைச் சமாளித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று நம்புவதாக அமைச்சர் ஜி.எஸ்.பீரிஸ் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது, சமாதானப் பேச்சுக்கள் முறியக்கூடிய நிலையிலில்லை. உலகில் நடந்த எந்தப் பேச்சுக்களும் சுமுகமாக, பிரச்சினைகளின்றி நடக்கவில்லை. நாங்கள் திருப்திப்படும் அளவுக்குப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## எப்படி, எதுவரை....!



### நியூசிலாந்து

*அணித்தலைவர்* - ஸ்ரீபன் பிளெமிங்

*பயிற்றுநர்* - டெனிஸ் அபஹூட்

*குழு B* - தென்னாபிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள், கென்யா, பங்காளதேஷ், கனடா.

*பலம்* - ஓர் அணியாகச் செயற்படும் பாங்கு (TEAM WORK). சிறந்த அணியென்று பெயர் இருந்த காலகட்டங்களில் எல்லாம் இந்த ஒற்றுமை உணர்வே மேலோங்கி நின்றது. குறைந்த ஒருநாள் வளத்தை, நிறைந்த வளமாக மாற்றும் திறமை. களத்தடுப்பு பிரமாதமாக அமைந்துள்ளமை. ஹட்வியின் பின் சிறந்த வேகப்பந்து வீச்சாளரான ஷேன் பொண்ட் கிடைத்துள்ளமை.

*பலவீனம்* - கிறிஸ் கெய்ன்ஸ் பூரண சுகதேகியாக விளையாடா விட்டால் அணியின் சமநிலையில் பாதிப்பு இருக்கும். உலகக் கிண்ண அதிசிறந்த ஒருநாள் ஆட்டக்காரர்களில் ஒருவரான கிறிஸ் கெய்ன்ஸை நம்பியிருப்பது. பந்து வீச்சில் அதியுயர் திறமை காணாமல் இருப்பது.

*முக்கிய நபர்* - நாதன் அஸ்ரல். முன்றாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் விளையாடும் இவர், வேகமாக ஓட்டங்கள் குவிக்கக் கூடிய ஆரம்பத் துடுப்பாட்டவீரர் எனினும், இவரது சாதனைப் பட்டியல் கூடிய சிறப்பாக அமைந்திருப்பது தாயகத்தில்தான்.

*ஒருநாள் தரம்* - இந்தியாவை 5-2 என்ற வகையில் நியூசிலாந்தில் வைத்து ODI இல் தோற்கடித்தமை (நியூசிலாந்து களங்கள், தடங்கள் விமர்சனத்துக்குள்ளானது). சாதகமான சூழ்நிலைகளில் சிறப்பாகச் செய்ய முடியும் என்ற ஸ்ரீபன் பிளெமிங்கின் நம்பிக்கை. 2002 இல் பாகிஸ்தானிடம் [illegible]-0 என்றவாறும் மேற்கிந்தியத்தீவுகள் அணியிடம் 3-1 என்றவாறும் தோல்வி. ICC போட்டியில் முதல் சுற்றில் OUT.

*கடந்தகாலச் சாதனைகள்* - 1975, 1979, 1992, 1999 அரை இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றவர்கள். 1995இல் கால் இறுதியாட்டம் வரை.

*எதிர்வுகூறல்* - அரை இறுதியாட்டம் வரை.

# சவாலே சமாளி

இந்தியா தனது மூன்றாவது ஆட்டத்தில் சவாலொன்றை எதிர்கொண்டிருந்தது. ஏனெனில், சில தினங்களுக்கு முன் அவுஸ்திரேலியாவிடம் படுதோல்வி கண்ட இந்திய அணிக்கு எதிராக, இந்தியக் கிரிக்கெட் ரசிகர்கள் மேற்கொண்ட வழக்கமான செயற்பாடுகள், இந்திய அணிக்கு உளரீதியாகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், அவர்கள் கைவிடப்பட்ட நிலையை உணரவும் வழிசமைத்து விட்டது.



உறுதியான ஆரம்பம் கொடுத்த ஷேவாக்.

இந்நிலையில் SUPER SIX சந்தர்ப்பம் மற்றும் தமது வலிமையை நிரூபித்தல் என்ற வகையில் இந்தியாவுக்குப் பெரும் சவாலொன்று காத்திருந்தது. அதனை அவர்கள் திட்டமிட்டவகையில் எதிர்கொண்டு வெற்றிவாகையும் சூடியிருக்கின்றார்கள்.

நாணயச் சுழற்சியில் சிம்பாப்வே வென்றது, சிலவேளை கங்கூலிக்கு சிறியதொரு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கக்கூடும். (முதல் கோணல் முற்றும் கோணல்) ஆனால் ஷேவாக், டெண்டுல்கர் சோடி சரியாக ஆடி, பொருத்தமான அடித்தளமொன்றைப் போட்டுக் கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து சில சரிவுகள் ஏற்பட்டாலும், ஒருபுறம் டிராவிட் நின்றுபிடிக்க, மறுபுறத்தில் வந்தவர்கள் ஓரளவில் ஆடி 50 ஓவர்களில் 255 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டார்கள். இது இந்திய அணி திருப்திப்படும் வழமையான ஓட்ட எண்ணிக்கை இல்லையென்றாலும், தாழ்நிலையிலிருந்த அணியொன்றுக்கு கௌரவமான எண்ணிக்கையாகவே இருந்தது. அதேவேளை 50 ஓட்ட முடிவிலேயே இந்திய அணியினர் தமது வெற்றியை உணர்ந்திருப்பார்கள் என்று எண்ண முடிகின்றது.

அந்தவகையில்தான் இந்திய அணியின் விளையாட்டு இருந்தது. இந்தியப் பந்துவீச்சு, களத்தடுப்பு எல்லாமே உயர்வாக இருந்தமையை மறுக்கவியலாது (ஓரிரு சறுக்கல்கள் இருந்தனதான்).

இதில் சிறப்பு - சிம்பாப்வேயின் எந்த ஒரு சோடியையும் நின்று, நிதானித்து, பலம்பெற்று ஓட்டம் சேர்க்க இந்தியா விடவில்லை என்பதுதான். துடுப்பாட்ட வீரராக சோபிக்க முடியாத கங்கூலி, பந்து வீச்சில் அதனை ஈடுசெய்தார் எனலாம்.

இதேவேளை, சிம்பாப்வே பக்கம் பிளவர் சகோதரர்கள் சாதிக்க முடியாமல் போனது அவர்களது துரதிர்ஷ்டம், இந்தியாவின் அதிர்ஷ்டம்.

எது எவ்வாறாயினும் இந்தியாவுக்குத் தேவைப்பட்டது ஒரு வெற்றி. அதனைப் பெற்றுக்கொண்டது இந்திய அணி. இந்திய அணி சாதனை புரிந்ததென்றோ சிம்பாப்வே சோடை போனதென்றோ கூறிவிடமுடியாது.

✦




தப்பிப் பிழைத்தது தலையா? தலைவரா?

## நேற்றைய ஆட்டத்திலிருந்து...




மழையால் ஈரமான ஆடுகளத்தை பொலிஸ் ஹெலிகொப்டர் ஒன்று தாழப்பறந்து உலர்த்துகிறது. ஒரு மணிநேரத் தாமதத்தின் பின்பே ஆட்டம் ஆரம்பமாகியது.




① மேஹரை வீழ்த்திய மகிழ்ச்சியில் நெதர்லாந்து.

② ஹேடன் - அவுஸ்திரேலியாவின் நல்ல ஆரம்பம்.

③ நெதர்லாந்தின் முதல் விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் ஜிலெஸ்பி.




# புதிய நாற்று புதிய காற்று

இந்திய சிம்பாப்வே ஆட்டத்தில் ரசிகர்களின் பார்வையை ஒரு சிறுபையன் கவர்ந்திருப்பானே. இந்தியத் தரப்பில் பார்த்திப் பட்டேலை விட்டால் சின்னஞ்சிறிசு ஏதும் இல்லை. அப்படியாயின், சிம்பாப்வே அணியில்தானே அவன் இருக்க வேண்டும். அவன் வேறு யார்? சிம்பாப்வே அணியின் சிறுபையன் டாடென்டா டைபூதான்.



2001 இல் 17 வயதில் டெஸ்ட் மற்றும் ODI ஆட ஆரம்பித்தவன். இந்தியாவுடனான ஆட்டத்தில் REHULAR விக்கெட் காப்பாளரான அன்ட்ரூ பிளவர் விளையாடியபோதும், டைபூவே விக்கெட் காப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தான். அதனை இச்சிறுவன் எவ்வாறு நிறைவேற்றினான் என்பது, எல்லோருக்கும நன்கு தெரிந்திருக்கும். ஷேவாக், யுவராஜ் சிங் இருவரின் OUT இல் டைபூவின் பங்கு பந்து வீச்சாளருடன் சரிசமம். அவனது துடிப்பென்ன, உற்சாகம் என்ன!

சிம்பாப்வே அணிக்கு ஒரு மிகச்சிறந்த விக்கெட் காப்பாளர் கிடைத்திருக்கிறான். விக்கெட் காப்பு மட்டுமல்ல துடுப்பாட்டத்திலும் சூரப்புலிதான். இந்திய அணி வீரர்களின் பந்துவீச்சு அற்புதமாக இருந்தவேளையிலும் டைபூவின் விக்கெட்டை வீழ்த்த எந்த இந்தியப் பந்துவீச்சு நிபுணராலும் இயலவில்லை.

டைபூ எடுத்த ஓட்டங்கள் 29 Not out. இதுவே அணியின் அதிகூடிய ஓட்டங்கள். நிறைந்த எதிர்காலம் உள்ள வீரர். TIBBLY என்ற செல்லப் பெயர் கொண்ட டைபூ பிறந்தது 1983-05-14 இல். Good Luck.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### அவுஸ்திரேலிய அணி எதிர் நெதர்லாந்து அணி

#### அவுஸ்திரேலிய அணி

| | | |
|---|---|---|
| மேஹர் | C பங்க் b லீட் | 26 |
| ஹேடன் | C ஷீவேர்லி b லீட் | 33 |
| மாட்டின் | not out | 67 |
| லீமன் | not out | 29 |
| உதிரிகள் | 15 | |
| மொத்தம் 2/170 (36 ஓவர்கள்) | | |

#### பந்து வீச்சு - நெதர்லாந்து அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஷீவேர்லி | 7 | 0 | 42 | 0 |
| லெஃவபர் | 8 | 2 | 19 | 0 |
| லீட் | 7 | 0 | 34 | 2 |
| பேர்க் | 7 | 0 | 32 | 0 |
| எஸ்மியர் | 5 | 0 | 16 | 0 |
| பங்க் | 2 | 0 | 20 | 0 |

மழையால் ஓவர்கள் குறைக்கப்பட்ட ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 36 ஓவர் களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. நெதர்லாந்து 30.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வி கண்டது.

*சிறப்பாட்டக்காரர்* - டி. ஆர். மாட்டின்.

#### நெதர்லாந்து அணி

| | | |
|---|---|---|
| ட்ரூஸ்ட் | C பைக்கல் b லீமன் | 23 |
| பங்க் | C மாட்டின் b ஜிலெஸ்பி | 01 |
| ஜீயூடெறன்ட் | C மேஹர் b ஜிலெஸ்பி | 05 |
| நூட்விஜ்க் | LBW b லீமன் | 13 |
| லீட் | C மேஹர் b பைக்கல் | 24 |
| சொல்ட் | LBW b பைக்கல் | 08 |
| ஷீவேர்லி | b ஹார்வி | 09 |
| பேர்க் | C பொண்டிங் b பைக்கல் | 09 |
| லெஃவபர் | not out | 14 |
| ஸ்மிட்ஸ் | C மேஹர் b ஹார்வி | 00 |
| எஸ்மியர் | C பொண்டிங் b ஹார்வி | 00 |
| உதிரிகள் 16 | | |
| சகல விக்கெட்டுக்களும் இழந்து 122 (30.2 ஓவர்கள்) | | |

#### பந்து வீச்சு - அவுஸ்திரேலிய அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மக்ரா | 3 | 1 | 10 | 0 |
| ஜிலெஸ்பி | 3 | 0 | 07 | 2 |
| லீமன் | 8 | 0 | 27 | 2 |
| சிமென்ஸ் | 7 | 0 | 36 | 0 |
| பைக்கல் | 5 | 0 | 13 | 3 |
| ஹார்வி | 4.2 | 0 | 25 | 3 |

## நாளும் ஒரு வினா

ஒரு, TIE ஆட்டம் தென்னாபிரிக்காவை இறுதிப்போட்டியிலிருந்து விலக்கியது. அது எது?

அவுஸ்திரேலியா (213 - 49.2) Vs
தென்னாபிரிக்கா (213 - 49.4) - 1999
உலகக் கிண்ண அரைஇறுதி ஆட்டம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பேச்சு முறிவடையும் நிலை என கருதிவிட வேண்டாம்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வைக் காண்பதற்காக அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பரஸ்பர நம்பிக்கையுடனும் இணக்கப்பாட்டுடனும் செயற்பட்டு வருகின்றனர். இந்நிலையில் பேச்சுவார்த்தைகள் காலதாமதமடைகின்றன அல்லது முக்கிய தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என்பதற்காகப் பேச்சுவார்த்தை முறிவடையும் நிலையில் உள்ளது என யாரும் கருதிவிடக் கூடாது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

உள்நாட்டுப் போருக்கு முடிவு காண்பதற்காக - தென்னாபிரிககா, ருவாண்டா, வடஅயர்லாந்து ஆகிய நாடுகளில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் நீடித்துச்சென்றதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003**

**இன்றைய ஆட்டம்**

ICC Cricket World Cup South Africa 2003

நியூசிலாந்து Vs கென்யா - Nairobi Gymkhana Club - 1.30 pm.

### தமிழீழ தேசிய விளையாட்டுப் போட்டி

# நேற்றைய உதைபந்தாட்டத்தில் யாழ்.,வவுனியா அணிகள் வெற்றி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபெறும் தமிழீழ தேசிய விளையாட்டுப் போட்டியின் முதல்நாளில் நேற்று மாலை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் யாழ்ப்பாணம், வவுனியா அணிகள் வெற்றிபெற்றன.

இந்தப் போட்டிகளில் யாழ். அணி 4:1 என்ற கோல்கணக்கில் கிளிநொச்சி 'ஏ' அணியை தோற்கடித்தது. தொடர்ந்து வவுனியா அணி முல்லை அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகண்டது.

இதேவேளை, மேஜர் சோதியா ஞாபகார்த்தக் கிண்ணத்திற்கான முதலாவது வலைப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் அணி கிளிநொச்சி அணியை 32:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகண்டது.

கரப்பந்தாட்டப் போட்டியில் 25:23, 25:11, 18:25, 25:23, என்ற புள்ளிகள் அடிப்படையில- யாழ். மாவட்ட அணி, அம்பாறை பொலிஸ் அணியை வெற்றிகொண்டது.

## யாழ்.நூலக விவகாரம் இன்று நாடாளுமன்றில்

யாழ். நூலகத்தை குறித்த தினத்தில் திறந்து வைப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெறவிருக்கின்றது.

நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதற்கான நாடாளுமன்ற விவாதத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இன்று இடம்பெறவிருக்கும் விவாதத்துக்கு மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளார்.

## திருமலையில் பேரணி பொலிஸாரால் தடுப்பு!

மானிப்பாயில் பெண் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து திருகோணமலையில் அம்மா வட்ட மகளிர் அமைப்புக்களால் நடாத்தப்படவிருந்த பேரணி பொலிஸாரால் தடுக்கப்பட்டது.

திருமலை நகரிலுள்ள சென். ஜோசப் கல்லூரியிலிருந்து நேற்றுக் காலை பேரணி புறப்பட்ட ஆயத்தமாகியபோது முன்னனுமதி பெறவில்லையெனக் கூறிப் பொலிஸார் தடுத்தனர்.

இதையடுத்து இருதரப்புக்கும் இடையே தடுமையான வாக்குவாதம் நடைபெற்றது. பொலிஸார் தொடர்ந்தும் தடுக்கவே கல்லூரி வளாகத்திற்குள்ளிருந்து- பேரணியில் கலந்துகொண்டோர் உரத்த குரல் எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

### ஓகஸ்ட் மாதத்திற்கு முன்பாக

# உயர்தரப் பரீட்சை புள்ளியின் கீழ் 1000 பேருக்கு ஆசிரிய நியமனம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவிவரும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளி அடிப்படையில் ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இந்த நியமனங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னதாக வழங்கப்படவிருக்கின்றன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தகுதிகாண் போட்டிப் பரீட்சை நடத்தப்படும்.

அதேசமயம், ஆசிரியர்கள் வெற்றிடங்களை நிரப்ப பல்கலைக் கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமோ, உடற்கல்வி டிப்ளோமோ பட்டம் பெற்றவர்களுக்கும் சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

# உள்ளூராட்சி சபை நடவடிக்கை ஆராய ஆணையாளர் வருகை

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் எதிர்கால நடைமுறைகள் குறித்து ஆராய்வதற்கென, வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி விஜயலட்சுமி இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

மேற்படி விடயம் சம்பந்தமான கூட்டமொன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

## புரிந்துணர்வு...

இருக்கின்றனர். மக்கள் எதிர்பார்ப்பு முழுமையடையவில்லை. இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடம் திரும்ப முடியாது அவல வாழ்வு வாழ்கின்றனர். இராணுவக் கெடுபிடி, நெருக்குவாரம் தொடர்கிறது எனச் சுட்டிக்காட்டினார்.

தென்னாபிரிக்கப் பிரமுகர்களுடனான நேற்றைய சந்திப்பின் பலாபலன்கள் குறித்துச் செய்தியாளர்களிடம் தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில்,

'எம்மைப் போலவே தென்னாபிரிக்கர்களும் இன வன்முறை, அடக்குமுறை, ஆக்கிரமிப்பு என்பவற்றைச் சந்தித்தவர்கள். நாம் ஒரு தீர்வை எட்டும் முயற்சியில் தென்னாபிரிக்கர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது, எமக்கு எதிர்காலத்தில் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு உதவியாக அமையும் என்றார்.

நேற்றைய சந்திப்பின்போது - தற்போதைய அமைதி முயற்சிகள் தொடர்பாகவும், பேச்சுவார்த்தைச் சூழ்நிலை தொடர்பாகவும் தென்னாபிரிக்க பிரமுகர்கள் கேட்டறிந்து கொண்டதாகவும், தமது விடுதலைப் போராட்டம், அதனூடு ஏற்பட்ட மாற்றம், அனுபவங்கள் குறித்துக் கருத்துக்கள் பரிமாற அவர்கள் ஆர்வம் வெளியிட்டதாகவும் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

பேச்சுக்களுக்கான தென்னாபிரிக்காவின் அழைப்புப்பற்றி அனுசரணையாளரான நோர்வேதான் முடிவெடுக்கவேண்டும் என்றும் தெரிவித்த தமிழ்ச்செல்வன், எதிர்காலத்தில் புலிகளின் அரசியற்குழு- தென்னாபிரிக்கா செல்லும்போது அங்குள்ள சமஷ்டிமுறை பற்றி விரிவாக ஆராயப்படும் என்றும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

## தென்னாபிரிக்க...

யற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சமாதானச் செயலக துணைப் பணிப்பாளர் செல்வி ஆகியோரும் பங்கேற்றனர்.

இவர்களிடையிலான சந்திப்பு இரண்டு மணித்தியாலம் நீடித்தது. முன்னதாக தென்னாபிரிக்க பிரமுகர்கள் விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து, வாகன மூலமாக கிளிநொச்சியைச் சென்றடைந்தனர்.

ஐந்துநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த இவர்கள், நேற்றும் இன்றுமாக பல தரப்பினரையும் சந்தித்து வருகின்றனர்.

## தமிழீழ...

நகுலன், மேஜர் சோதியாவின் பெற்றோர் ஆகியோர் ஈகச்சுடரினை ஏற்றி வைத்தனர்.

தமிழீழ விளையாட்டுத்துறைக் கொடியினை, தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றி வைக்க, ஒவ்வொரு மாவட்ட விளையாட்டுத்துறைக் கொடியினையும் அந்தந்த மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரிகள் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றும் வைபவம் இடம்பெற்றது. ஒலிம்பிக் தீபத்தினை கேணல் துர்க்கா ஏற்றி வைத்தார். பின்னர் போட்டியாளர்கள் சார்பில் ஒருவரும் நடுவர்கள் சார்பில் ஒருவரும் உறுதியுரை எடுத்துக் கொண்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாண கலாசார விளையாட்டுத்துறைச் செயலாளர் தியாகலிங்கம் ஆசியுரை வழங்கினார். தமிழரின் கலை கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் காவடியாட்டம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, இவ்வாண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின.

நேற்றைய இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.(லி)

## தென்னாபிரிக்காவில்...

இதன்போது தென்னாபிரிக்க அரசிடமிருந்து எடுத்துவரப்பட்ட வாழ்த்துச் செய்தி ஒன்று அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. இந்த வாழ்த்துச் செய்தியிலேயே மேற்படி வேண்டுகோளை தென்னாபிரிக்க அரசு விடுத்துள்ளது.

இதேபோல, சமாதான முயற்சியில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றமைக்காக விடுதலைப் புலிகளுக்கான வாழ்த்துச் செய்தியொன்றும் நேற்றைய சந்திப்பின்போது அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளிக்கப்பட்டது. இச்செய்தியிலும் மேற்படி பேச்சுவார்த்தைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

## நம்பிக்கையை...

களில் எல்லாம் மிகவும் நிதானமாகவும், பொறுமையுடனும், விட்டுக்கொடுப்புடனும் இருதரப்பும் நடந்து கொண்டுள்ளனர். இதனால் கடந்த ஒரு வருடகாலம் எமது நாட்டில் யுத்த அனர்த்தங்களும், அவலங்களும் தணிந்துள்ளன. மக்கள் சற்று நிம்மதியாக தமது பொதுவாழ்வைத் தொடர்கின்றனர். இதற்காக அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

எனினும், இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் பல மக்களுக்கு உண்டு. பல பிரதேசங்களில் மக்கள் இன்னமும் சென்று மீளக் குடியமர முடியாதநிலை தொடர்கிறது. இவ்வாறான விடயங்களில் அரசு விட்டுக்கொடுப்புடனும், நம்பிக்கையைக் கட்டி வளர்க்கும் வகையிலும் செயற்பட வேண்டும்.

இவ்விடயம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நான் ஏற்கனவே கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன் என்றும் ஆயர் மேலும் தெரிவித்தார். (க,லி)

## ஜே.வி.பி...

பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மக்கள் விடுதலை முன்னணியைச் சோந்த ஆயிரக்கணக்கானோர் இதில் கலந்துகொண்டதுடன், புரிந்துணர்வு உடன்படிக்கை நாட்டைப் பிரிப்பதற்கு வழிவகுப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

பேலியகொடவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த எதிர்ப்புப் பாதயாத்திரை, கொழும்பு கொள்ளுப்பிட்டிவரை சென்றது. கொள்ளுப்பிட்டியில் குறித்த எல்லையைத் தாண்ட முற்பட்டபோது, பொலிஸார் தடுத்தனர். அதையும் மீறி முன்னேற முற்படுகையில், பொலிஸார் தண்ணீர் தாக்குதல் பிரயோகத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதயாத்திரையில் பங்குபற்றியோர் அலரி மாளிகைவரையில் செல்வதாக முன்னர் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

MODERN EDUCATION CENTRE
NELLIADY

- G.A.Q.
- B.A. Part I
- B.A. Part II
- FIRST IN COMMERCE
- B.Com.

துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பம்.

குறிப்பு: ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களுக்கு விசேட நேரசூசி ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

- பொருளியல், அரசியல் விஞ்ஞானம்
  சனி, ஞாயிறு காலை 9.30 மணி
- ஆங்கிலம்
  சனி, ஞாயிறு காலை 10.30 மணி

(சி-608)

இந்திய சாஸ்திரியார் யாழ். வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார்.
சிங்கப்பூர் மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்பெற்ற பரம்பரை ஜோதிடர்.
ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற
S.N.குமாரசாமி அவர்கள்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும்

- திருமணத் தடையா?
- தொழில் முன்னேற்றம் இன்மையா?
- புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டுமா?
- தீராத வியாதியா?
- உயர் கல்வியில் தடையா?
- குழந்தைப் பாக்கியம் இன்மையா?
- குடும்பத்தில் பிரச்சினையா?
- வெளிநாடு செல்லத் தடையா?

மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்,
இல. 711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
✦ செவ்வாய் விடுமுறை
(சி-607)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ்.அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.